# வல்வையில் மக்கள் குடியிருப்பு பகுதிகளிலிருந்து இலங்கை இராணுவத்தினர் வெளியேறினர்


பக்கங்கள் 12 விலை ரூபா 3-00

ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 32 மாசி 27 ஷஃபான் பிறை 13 இதழ் 27

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 11-03-1990


## முகாம்களுள் முடக்கம்

(வடமராட்சி)

வல்வைப் பகுதி மக்கள் குடியிருப்பு பகுதியில் முகாமிட்டிருந்த இலங்கை இராணுவத்தினர் நேற்று முன்தினம் அங்கிருந்து முற்றாக வெளியேறி தமது முகாம்களுள் சென்றுள்ளனர்.

இப்பகுதியில் இலங்கை இராணுவத்தினர் 1987ம் ஆண்டு முதல் முகாமிட்டிருந்

(12ம் பக்கம் பார்க்க)

## தொண்டர் படையிலிருந்து 3,000 பேர் வெளியேறினர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண பிரஜைகள் தொண்டர் படையைச் சேர்ந்த 3000திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் அப்படையிலிருந்து விலகிவிட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்கள் அனைவரும் கடந்த சில மாதங்களிலேயே இவ்வாறு தமது படைப்பிரிவிலிருந்து பல காரணங்களுக்காக வெளியேறிவிட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(12ம் பக்கம் பார்க்க)

### வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு

# புதியதேர்தல் நடத்துவதையே இந்திய அரசும் விரும்புகிறது

## இந்திய தூதர் பேட்டி

(சென்னை)

"வடக்கு-கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு புதிய தேர்தல் ஒன்று நடாத்தப்படுவதையே இந்தியா விரும்புகின்றது. மாகாண சபையை கலைக்குமாறு இந்தியாவின் சார்பில் திரு. வரதராஜப்பெருமாளை நானும் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியும் கேட்டிருந்தோம்"

இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பாக தமிழக முதல்வருடன் பேச்சுக்கள் நடாத்திய பின் பத்திகையாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது இந்திய தூதர் திரு. மெஹ்ஹோத்ரா இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்; தமிழ் குழுக்களுடன்

(12ம் பக்கம் பார்க்க)

### திருமலையில்

## இந்திய படையினரின் இடத்தில் இலங்கை கடற்படையினர்

(திருகோணமலை நிருபர்)

திருமலையில் இந்தியப் படையினர் வெளியேறிய பகுதியில் இலங்கைக் கடற்படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(12ம் பக்கம் பார்க்க)

### எருக்கலம்பிட்டியில்

## புலிகள் மக்கள் முன்னணி கூட்டம்

[மன்னார்]

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டம் இன்று காலை 9 மணியளவில் எருக்கலம்பிட்டியில் நடைபெறவுள்ளது.

மக்கள் முன்னணித் தலைவர் திரு. கே. மகேந்திரராஜா (மாத்தயா) செயலாளர் திரு. யோகி யோகரட்ணம் கவிஞர் காசி ஆனந்தன், திரு. பரமமூர்த்தி ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள். (து)

### மாகாண சபையை கலைப்பதற்கு

## ஜனாதிபதிக்கு அரசியலமைப்பில் அதிகாரம் வழங்கப்படும்?

(கொழும்பு)

மாகாண சபையை கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கக்கூடிய முறையில் இலங்கையின் அரசியல் அமைப்பு திருத்தப்படலாம் எனத்தெரியவருகிறது.

இதற்கான சட்ட வரைவுகள் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

தற்போதுள்ள மாகாண சபைச்சட்டப்படி ஒருமாகாண சபையைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை என்பது தெரிந்ததே.

இதனை மாற்றியமைக்கும் முகமாகவே அரசியலமைப்பில் திருத்தம் கொண்டுவரப்படஇருக்கிறது.

இது அரசியலமைப்பின் 15வது திருத்தமாக அமையவுள்ளது. (து)

### தமிழ்நாட்டில்

## தமிழ்குழுக்களுக்கு இடமில்லை கருணாநிதி அறிவிப்பு

(சென்னை)

இலங்கை தமிழ் குழுக்கள் எச்சந்தர்ப்பத்திலும் தமிழ்நாட்டில் காலூன்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். மீண்டும் தமிழகத்தில் எந்தக் குழுவினதும் முகாம்கள் அல்லது பாசறைகள் அமைவதும் தடுக்கப்படும்.

இவ்வாறு தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி சென்னையில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழகத்தில் இந்தக் குழுக்கள் ஆயுத பயிற்சி பெறுவதையோ அல்லது ஆயுதம் தரித்திருப்பதையோ இனிமேல் தமிழக அரசு அனுமதிக்காது. அண்மையில் இடம்பெற்ற சம்பவம் போன்று இனியொன்று நடப்பதை தடுக்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது

இங்கு ஏதாவது குழுக்களின் நடமாட்டம் இருந்தால் அ

(12ம் பக்கம் பார்க்க)

### 'வெலிஓயாவில்'

## 4,000 தமிழ் குடும்பங்கள் மீண்டும் குடியேற்றம்!

(யாழ்ப்பாணம்)

'வெலி ஓயா' பகுதியில் சுமார் 4000 தமிழ் குடும்பங்கள் மீளக் குடியேற்றப்படவுள்ளன. அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுக்களையடுத்து இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது. 1984ம் ஆண்டிற்கு பின் 'வெலிஓயா'விலிருந்து சுமார் 4000 தமிழ் குடும்பங்கள் வெளியேறியுள்ளன. இவர்கள் மீண்டும் கொக்கிளாய்

(12ம் பக்சம் பார்க்க)

## சீனிவிலை குறையலாம்

[கொழும்பு]

சீனியின் விலை இலங்கையில் குறையக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக தெரியவருகிறது.

உலக சந்தையில் சீனியின் விலை வீழ்ச்சியடைந்திருப்பதாலேயே இங்கும் குறையக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக வர்த்தக அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். [க]

# அந்நியபடையெடுப்பு; தென்இந்தியதிரைபடங்கள் எமது கலாசாரத்தை சீரழித்துவிட்டன - மாத்தயா

[நமது நிருபர் கே. வி. கே. திருலோகமூர்த்தி)

அந்நியப் படையெடுப்பாலும் தென்இந்திய திரைப் படங்கள். சஞ்சிகைகள் வருகையாலும் எம் இனத்தின் கலாசாரம் சீரழிந்துள்ளது. இதிலிருந்து நாம் விடுபட வேண்டும்''

இவ்வாறு கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் நேற்று இரவு நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா [மாத்தயா] கூறினார்.

இக்கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் கிளிநொச்சி கலாசார அவையினால் நிர்மாணிக்கப்பட்ட கவின்கலைக் கல்லூரியை தலைவர் திரு. மாத்தயா திறந்து வைத்தார்.

இராணுவ சீருடையில் வருகை தந்த திரு மாத்தயாவுக்கும்முன்னணியின் செயலதிபர் திரு யோகி மற்றும் கவிஞர் காசி ஆனந்தன் வன்னிப்

(12ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய, பீற்றூட், கோவா விதைகள் விற்பனைக்குண்டு. பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 3576)

உடன் விற்பனைக்குண்டு. Platform Avery - England Made 5 அந்தர் தராசு. தொடர்பு:- சி. நாகலிங்கம், ஸ்ரீ கிருஷ்ணு மர அரிவு ஆலை. கண்டி வீதி, பளை. (C-597)

### நாவல்கள்

மீரா வெளியீடு கே. எஸ். ஆனந்தன் எழுதிய ''பூஜைக்காக வாழும்பூவை'' குடும்பத்தில் தோன்றும் அனைத்துப் புயலுக்கும் அசையாது நிற்கும் பூவை ஒருத்தியின் புனித வாழ்வை சித்தரிக்கும் குடும்ப நாவல். ராஜன் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். All Ceylon Distributors, Jaffna - Colombo. (சி 3572)

### தேவை

அச்சக வேலைகளில் அனுபவமுள்ள எழுத்துக் கோர்க்கத் தெரிந்த வேலைகள் பயில்வதற்கான படித்த பெண் பிள்ளைகள் தேவை. தொடர்பு கொள்ளவும். ஞானசுரபி புத்தகக் கம்பனி 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-3584)

மானிப்பாயில் ஆரம்பிக்கவிருக்கும் மோட்டார் உதிரிப் பாகங்கள் விற்பனை நிலையத்திற்கு காசாளர், விற்பனை உதவியாளர் பதவிக்கு (18 - 25 வயதிற்குட்பட்ட) பெண் ஊழியர்கள் தேவை. சொந்தக் கையெழுத்தில் 30-3-90 க்கு முன்னர் விளம்பர இல, 3573 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். (C-3573)

### PHARMACY CLASSES

Beginners/Revision, For Students who wish to appear for the Pharmacy Exam held by Ceylon Medical College Council. Classes will be conducted by Qualified Lecturers on Sundays. Qualification:- G. C. E (O/L). For further details contact: Northern Pharmacy, Hospital Road, Jaffna. (C 3569)

## நவாலி வை. எம். சி. ஏ

(மானிப்பாய்)

நவாலி வை. எம். சி 99வது வருடாந்தப் பொதுக் கூட்டம் வை. எம். சி. ஏ மண்டபத்தில் தலைவர் திரு. ஜே. தம்பிராசா தலைமையில் நடைபெற்றது.

புதுவருட இயக்குநர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். காப்பாளர் அருள் திரு.சாம். ரி. அல்பிரட் துணைக்காப்பாளர் அருள்திரு. வி. என். தர்மகுலசிங்கம், தலைவர் ஜே. ஐ. தம்பிராசா. துணைத்தலைவர்கள் டபிள்யூ. என். தேவகடாட்சம், விக்ரர் யோப்பு, பொதுச் செயலாளர் வி. சபாரத்தினம், இளைஞர் பணி இயக்குநர் எம். ஏ. றூபநாதன் எட்டுப்பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார், ஆலயத்தில் இன்று வாழ்வும் வழிபாடும் என்னும் பொருளில் யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு க. சிவானந்தமூர்த்தி சொற்பொழிவாற்றவுள்ளார்

இம்மாதம்18-ம் திகதி 'சமயமும் வழிபாடும்' என்னும் பொருளில் யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி நா. ஞானகுமாரனும், 25-ம் திகதி ''ஆழ்வார்களின் பாவனைப்பண்பு'' என்னும் தலைப்பில் சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் எல் சிவலிங்கராசாவும் உரையாற்றவுள்ளனர். (து)

## திருமலையில் இந்தியப் படையினர்
# வெளியேறியபகுதிகள்யாவும் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள்

(திருகோணமலை)

திருகோணமலையில் இந்தியப் படையினர் வெளியேறிய பகுதிகளை விடுதலைப் புலிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

திருகோணமலை நகரப் பகுதியைத் தவிர ஏனைய இடங்களிலிருந்து இந்தியப் படையினர் வெளியேறிவிட்டனர். நகரப் பகுதியிலிருந்தும் இம்மாதம் 15ம் திகதிக்குள் இந்தியப் படையினர் வெளியேறிவிடுவர் என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமைதிப்படையினர் நகரிலும் ஒருசில இடங்களிலுமே இப்போது நிலைகொண்டுள்ளனர். ஏனைய பகுதிகளில் இலங்கைப் பொலிசாரே கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

முன்னர் மக்கள் தொண்டர் படையினர் கடமையில் ஈடுபட்டிருந்த பகுதிகளில் எல்லாம் இப்போது இலங்கைப் பொலிசாரே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

15ம் திகதியுடன் சகல இந்தியப் படையினரும் 'கிளப்பன் பேர்க்' என்னும் பகுதிக்குச் சென்றுவிடுவார். அங்கிருந்து மார்ச் 21ம் திகதிவரை படிப்படியாக இந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும் தெரியவருகிறது. (து)

## ஜம்மு - காஷ்மீர் சென்ற
# ராஜீவுக்கு எதிராக கோஷம் இடைநடுவில் திரும்பினர்

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீர் நிலவரங்களை நேரில் அறியச்சென்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராஜீவ் காந்திக்கு எதிராகப் பல இடங்களில் போட்ட பலத்த கோஷங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் அடுத்து இவர் இடைநடுவில் புதுடில்லி திரும்பினர்.

அங்கு தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகளை நேரில் அறிந்துவரவும் மக்களை நேரடியாக சந்திக்கவும் அனைத்துக் கட்சித் குழு ஜம்மு-காஷ்மீருக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்தது.

இதன்போதே அங்கு அமுல் படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவையும் மீறி திரு. ராஜீவுக்கு எதிராக கோஷமிட்டதுடன் ஆர்ப்பாட்டமும் செய்தனர். கடந்த நாலு வருட கால இந்திரா காங்கிரஸ் ஆட்சியே ஜம்மு-காஷ்மீரின் பிரிவினைக்கு வலிகோலியதாகவும் அவர்கள் தெரிவித்துமுள்ளனர்.

இதையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராஜீவ் காந்தி பலத்த பாதுகாப்புடன் உடனடியாக தனி இராணுவ விமானம் மூலம் புதுடில்லி திரும்பினர். அங்கு பத்திரிகையாளர்களை சந்தித்தபோது, காஷ்மீர் நிலைமை மிக மோசமடைந்தும், பயங்கரமாகவுமுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (சி)

## புலமைப் பரிசில் பரீட்சையில் மூவர்சித்தி

(தென்மராட்சி)

நுணுவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் 1989ம் ஆண்டு புலமைப் பரிசில் (ஆண்டு 5) பரீட்சையில் செல்வன் சி. கஜானந்தா. செல்வி கு. றேணுகா செல்வி இ. ரோகினி ஆகிய மூவரும் சித்தியடைந்துள்ளனர். (135)

## வெள்ள அகதிகளுக்கு அரிசி வழங்க ஏற்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்கென 200 மெற்றிக் தொன் பாகிஸ்தான் அரிசி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்திற்கு 10 கிலோ அரிசி வீதம் வழங்கப்படும் எனவும் 20 ஆயிரம் குடும்பங்களுக்கு இந்த அரிசி வழங்கப்படும் எனவும் மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (121)

## விளையாட்டுப் போட்டி

(தென்மராட்சி)

கொடிகாமம் அரசினர் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி நாளை 12ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது

பாடசாலை அதிபர் திரு. அ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் பிரதம விருந்தினராக கொத்தணி அதிபர் திரு ச. சின்னத்தம்பியும் கௌரவ விருந்தினராக இலங்கைவங்கி முன்னுள் முகாமையாளர் திரு. செ, ஸ்ரீ ரங்கநாதனும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேசசபைத் தலைவர் திரு. பு. சுந்தரம்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்கிறுர்கள், (து)

## திருவாசகமுற்றேதல்

(தென்மராட்சி)

சாவகச்சேரி சங்கத்தானை பெரியமாவடி முருகன் கோவிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றேதல் நடைபெறவுள்ளது. (து)

## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் களபூமி விளையாட்டுக்கழகத்தின் 41-வது ஆண்டுவிழா இன்று ஞாயிறு மாலை சுந்தரமூர்த்தி நாயனுர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சிறுவர் நிகழ்ச்சிகள், பரிசளிப்பு விழா ஆகியவற்றுடன் விசேட இசை நிகழ்ச்சியும் ஆண்டுவிழாவையொட்டி நடைபெறவுள்ளது. (து)

## ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

வேலணை தெற்கு ஐயனுர் சனசமுக நிலையம் நடாத்தும் இளையவனின் ''காணி உறுதி'' சிறுகதை தொகுப்பின் நூல் ஆய்வரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஐயனுர் சனசமுக நிலையத்தில் நடைபெறும்.

வேலணை வடக்கு கிராம சேவையாளர் கே. சிவகுலசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் ஆய்வரங்கில் என். சட்டநாதன், வி. செல்லத்துரை. ரி. தர்மராஜா செல்வி எஸ். மாலினி, எம். ஜெயராமசர்மா, ஆ. கந்தையா எம். சண்முகவடிவு ஆகியோர் நூலை ஆய்வுரை செய்வர். (12)

## வீரவேங்கை கேடயம்

(மட்டுவில்)

உசன் இராமநாதன் கொத்தணி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளில் சிற்றம்பலம் இல்லம் முதலிடத்தைப் பெற்று வீரவேங்கை தியாகிகள் நினைவு கேடயத்தையும் பெற்றுக்கொண்டது.

வித்தியாலய மைதானத்தில் பிரதிஅதிபர் திரு. வே. மார்க்கண்டு தலைமையில் ஆரம்பமான இந்த விளையாட்டுப் போட்டிகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு என். ரஞ்சன் வீரவேங்கை ராகுலன் நினைவு கேடயத்தை வழங்கினுர்.

வைத்திலிங்கம் இல்லம் இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது.

## ஜெயலலிதா டாக்டர்களின் கண்காணிப்பில்

(சென்னை)

கார் - விபத்தில் படுகாயமடைந்து சென்னை தேவகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலளர் செல்வி ஜெயலலிதா ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறிய போதிலும் தொடர்ந்து மூன்று வாரகாலம் டாக்டர்களின் கண்காணிப்பில் இருக்கவேண்டும் என ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 24ம் திகதி மீனம்பாக்கத்தில் இடம்பெற்ற விபத்தில் செல்வி ஜெயலலிதாவும் அவரது உதவியாளர் திருமதி சசிகலா நடராஜனும் படுகாயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டது தெரிந்ததே.

தமிழக முதல்வர் திரு. மு, கருணுநிதி தம்மைக் கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சியே இந்த விபத்து என செல்வி ஜெயலலிதா குற்றம் சாட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

90 A/L விஞ்ஞான மாணவர்களுக்கு
PHYSICS-TUTORIAL/DISCUSSIONS
By Mr. Raveendranathan, B. Sc. (Sri Lanka)
Dip. in Ed (Jaffna)
on Mon. & Wed. 6-30 a. m.
ஆரம்பம்: 12 - 03 - 1990
3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (ஏ-599)

Project Management Services Ltd.
33, Brown Road, Neeraviadi, Jaffna
Engineering Consultants & Project Managers

WANTED SECRETARY
We are looking for smart and Personable person under 35 years for appointment as Secretary to our Operations Manager.
Excellent command of the English Language and the ability to handle correspondence independently is essential for this position which is interesting, varied and challenging. Must have a knowledge of typing and shorthand. Post carry junior executive status and an enrolment package around Rs. 2400/- per mensum.
Please write to the Operations Manager on or before 14 March 1990.
(A-589)

ஈழநாடு
வாரமலர்
EELANADU VARA MALAR

## அறிவியற்கலை- புறக்கணிக்கமுடியாது!

இருபதாம் நூற்றூண்டின் இறுதி தசாப்தத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், இருபத்தோராவது நூற்றூண்டை எதிர்கொள்ளத் தயாரா?

இளைய தலைமுறையினர் அந்த நூற்றூண்டிற்கான வாழ்க்கை முறைகளுக்கு ஏற்ப நவீன அறிவியற்கலைகளை அறிந்து வருகின்றூர்களா?

இயற்கைக்கு மீண்டும் போதல், சூழல் மாசடைதல் போன்ற சில கருத்துக்கள் பிரசாரம் செய்யப்படுகின்றன.

அவற்றில் உள்ள ஆழமான கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்

ஆனுல், ஒரேயடியாக விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பங்களையும் வெறுத்து ஒதுக்கவேண்டுமா?

மீண்டும் காட்டு வாழ்க்கைக்குச்சென்று, மரவுரி போர்த்து, உதிர்ந்த சருகுகளையும், காய்கனிகளையும் உண்டு வாழும் நிலைக்குப் போக வேண்டுமா?

பொருத்தமான தொழில் நுட்பங்களைப் புறக்கணிக்க முடியாது.

சகல துறைகளிலும் உள்ள நவீன கருத்துக்களை இளம் சமுதாயம் அறியும் வாய்ப்புக்களை ஆக்க வேண்டும்.

பாடசாலைகள், பத்திரிகைகள், தொடர்புச் சாதனங்கள் - இவற்றின் பங்கென்ன?

# பாடசாலைகளில் கம்பியூட்டர் கல்வி

நோயல் ஏ. விமலேந்திரன்
(கம்பியூட்டர்துறைத் தலைவர், யாழ்ப்பாணக் கல்லூரி)

இன்று கம்பியூட்டர், அல்லது கணனித்துறை மின்னல் வேகத்தில் வளர்ந்து வருகின்றது. எங்கு நோக்கினும் கம்பியூட்டர்; எதனிலும் கம்பியூட்டர். என்ற நிலையில் மேலைத்தேய நாடுகள் இருக்கின்றன. மேலைத் தேயங்களின் கல்விக்கூடங்களில் கம்பியூட்டர் நன்கு பரவிவிட்டது. கல்லூரிகளிற் போதிப்பதற்கு

### தொழில் நுட்பம்

மட்டுமின்றிக், கல்லூரியின் நிர்வாகத்தைக் கவனிப்பதற்கும் கம்பியூட்டர் அவசியமாகிவிட்டது. கம்பியூட்டர்கள் மிக அதிகமான தரவுகளைச் சேர்த்து வைக்கக்கூடிய ஆற்றல் கொண்டவை. பெரிய நூல் நிலையங்களிலுள்ள புத்தகங்களை ''ரேப்'' வடிவிலே, அல்லது ''டிஸ்க்'' வடிவிலே சேர்த்து வைக்கமுடியும். இதனுற் பெரிய நூலகத்தைக் கையடக்கமான ஒரு பெட்டிக்குள் சுருக்கிக் கொள்ளலாம்.

சிறுவர், சிறுமியர்க்குஎழுத்து வாசிப்பு, கணிதம் என்பனவற்றுடன் கம்பியூட்டர்ப் பயிற்சியும் அளிக்கப்படவேண்டும். எனவே கல்வியின் முக்கிய நரம்பாகிய கலைத்திட்டம், இத்துறையை உள்வாங்கி, அதன் ஆய்வுத்தளமாகிய பாடசாலைகளில் அறிமுகஞ் செய்தல்லேண்டும்.

கல்வியுலகில் மாணவர்கள் மத்தியிற் கற்பிப்பதற்குப் பல துணைக் கருவிகளை நாம் பயன்படுத்துகின்றேும். இதனடிப்படையில் உருவாகிய துறைதான், செவிப்புலச் சாதனங்கள் என்னும் விசேட துறையாகும். இத்துறை கல்வியை எளிதாக்க உதவுகின்றது. இவ்வாறு, ஒரு துணைக் கருவியாக நாம் கம்பியூட்டர்களையும் பயன்படுத்தலாம். ஒரு ஆசிரியருக்குப் பதிலாகவே கம்பியூட்டரைப் பயன்படுத்தலாம். ஒருகுறித்த துறையிலேவிசேட பயிற்சிபெற்ற ஆசிரியர் கிடைக்காதவிடத்து, ஒரு கணனியை அதற்கீடாகப் பாவிக்க முடிகின்றது. மேலும் ஒரு கம்பியூட்டரின் உதவி கொண்டே, எல்லாவிடயங்களையும் மாணவர்கள் தமக்கு வசதியான நேரத்திலே படித்துக் கொள்ளலாம். அத்துடன் மீளாய்வுக்கும், நிவிர்த்திகாண் கல்விக்கும் இது உதவியாகவிருக்கின்றதை நாம் கண்டுகொள்ளலாம்.

மேனுடுகளிலே இதற்கென ஒரு விசேட துறையுண்டு. அது கணனியை அடிப்படையாகக் கொண்ட போதனை. (Computer Assisted Instruction) என்றழைக்கப்படுகின்றது. இது ஒரு ஒழுங்கு வரையறை கொண்ட நிபந்தனைகளை அடக்கியதொரு கோவையாகும். இக்கோவையை அநேகமாக ரேப்பிலே அல்லது டிஸ்க்கிலே பதிவு செய்து வைத்திருப்பார்கள். இப்பதிவுகளில் ஒன்றை ஆசிரியர் எடுத்து ஒருமாணவனுக்கு வெளிப்படுத்தலாம்.

மனிதனுடையமூளை இரண்டு பெரிய துறைகளைக் கொண்டது. முதலாவது தரவுகளைக் கிரகித்தல்; அவற்றை ஆராய்ந்து பல செயற்பாடுகளைச் செய்து, பின்னர் ஒரு பிரயோசனமான செய்தியாக வெளிக்கொண்டு வருகின்றது, இரண்டாவதாக. அச்செய்தியை ஞாபகத்தில் வைத்திருக்கின்றது. செயற்பாடுகள் என்று சொல்லும்போது, அவை இரண்டு பகுதிகளைச் சார்ந்தவை. ஒன்று;- கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் போன்ற கணிதச் செயற்பாடுகள். மற்றையது - கூடியது, குறைந்தது, சமமானது போன்ற ஒப்பீடுகளைச் செய்கின்ற அளவையியல் சம்பந்தமான செயற்பாடுகளாகும். மனிதன் தான் சுகமாகவும், இலகுவாகவுஞ் செயற்பாடுகளை நடத்தக் கருவிகளைக் கண்டறிந்தான். எனவே இத் தொழிற்பாடுகளை ஓரளவிற்கு மூளையின் பிரதியீடாகச் செய்யுங் கருவியாகத்தான் கம்பியூட்டரை அமைத்தான். இவற்றின் மிகவும் முக்கியமானபணி, தரவுகளைச் சேர்த்துப் பதனிட்டுப் பிரயோசனப்

(10ம் பக்கம் பார்க்க)

# பக்தருள் சிறந்த பரதன்

### இலக்கியம்

காரை. செல்வராசா

ராமாயணத்துக்குக் கதாநாயகன் யார்?

துன்பத்தையும் இன்பத்தையும் ஒன்ருக எண்ணினுன் ராமன். 'காட்டுக்குப் போ' வென்று தந்தையின் உத்தரவைக் கைகேயி வாயிலாகக் கேட்டதும் சிறிதும் மனம் கலங்காமல் 'அங்கனமே ஆகுக' என்ருன் என்பது வால்மீகியின் வாக்கு. கம்பரோ கைகேயியின் சொற்கேட்டு ராமன் மகிழ்ந்தான் என்ருர்.

''ஒப்பதே முன்பு மற்றவ்
வாசகம்
உணர்ந்த பின்னர்
அப்பொழுது அலர்ந்த
செந்தாமரையினை
வென்ற தம்மா''

ஆனுல் ராமன் காட்டுக்குப் போன துயரத்தைப் பரதன் தான் அனுபவித்தான். செய்தி கேட்டதும் அங்குசத்தத்தாலும் தோமரத்தாலும் புண்படுத்தப்பட்ட யானை எனத் தரையில் வீழ்ந்தான், சினம் கொண்ட கட்செவியெனப் பெருமூச்சு விட்டான். கண்சிவந்து ஆடைதளர்ந்து திருவிழாவின் முடிவில் தோன்றும் கொடியைப்போல் கசங்கி நின்ருன் என்ருர் வால் மீகி. பரதனுடைய துயரம் மிகுந்த கோலத்தைக் கண்டு குகன் வியந்தான்.

''வற்கலையின் உடையானை
மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன
நகை யிழந்த முகத்தானை
கற் னிய கனிகின்ற
துயரானைக் கண்ணுற்ருன்
விற்கையினின் றிடைவீழ்
விம்முற்று
நின்றெழிந்தான்.''

என்கிருர் கம்பர்.

பதினுன்கு வருஷங்கள் கழிந்தபிறகு ராமருக்கு அயோத்தியில்பட்டாபிஷேகம் நடந்தது. அப்போதும் ராமன் களிப்புறவுமில்லை. வருந்தவுமில்லை. தான் ஆதியில் கைகேயியினிடம் எனக்குப் பொருளாசை கிடையாது. ரிஷியெனக் கருதுவாய்'' என்றுரைத்த சொல்லை நடத்தையில் காண்பித்தான். ஆனுல் ராமன் முடிசூடியபொழுது மகிழ்சியடைந்தவன் பரதன்!

அயோத்தியா காண்டத்தில் ''முனிவரெல்லாரும் ஒன்று கூடி ராமனுக்கு முடிசூட்டி நான் காண தேவர்கள் அருள வேண்டும்'' என்று சபதம் செய்திருந்தான் பரதன், முடிசூட்டும் தறுவாயில் வெகு நாட்களாய் வளர்ந்து வந்த என்மனேரதம் இன்றுதான் கைகூடியது என்று ஆனந்தக் களிப்புற்ருன். ஆகவே ராமனைக் கடவுள் என்றே கருதுவோம். இன்பத்தையும் துன்பத்தையும் கடந்து நிற்கும் கடவுளைக்கதாநாயகன் என்று சொல்வது பொருந்தாது நல்லொழுக்கம், அன்பு, மன உறுதி எல்லாநற்குணங்களும் வாய்ந்து. நன்னெறி தவருத நாயகன் பரதன் என்றே சொல்லவேண்டும்.

காட்டுக்கு சென்ற ராமனைக் காணும் வரையிலும் பரதன் பட்ட துயரத்தை வால் மீகியும் கம்பரும் பலவிதமாக வர்ணித்திருக்கிருர்கள். ராமரை காணும் வரை என் மனம் சாந்தம் அடையாது என்று பரதன் சொன்னதை வால் மீகியில் அடிக்கொரு தடவை காணலாம். ராமன் கிழங்கை தின்று புல்லில் தங்கி வருந்தியதை அறிந்தும் தன் உயிர் போகவில்லையே என்று வருந்தியதைக் கம்பர் சுவையுடன் குறிப்பிடுகிருர்.

''இயன்றதென்பொருட்டினுல்
இவ்விடர் உனக்கென்ற
போதும்
அயின்றனை கிழங்கும் காயும்
அமிர்தென அரியபுல்லில்
துயின்றனை யெனவுமாவி
துறந்திலேன் சுடங்குகாசு
குயின்றுயர் மகுடஞ்சூடும்
செல்வமும் கொள்வான்
யானே.''

பக்தி நூல்களில் பக்தர்களுடைய தன்மையைக் குறித்தும் அவர் வேண்டும் முத்தியைக் குறித்தும் பலவாறு விவரித்திருக்கிருர்கள். தான் வழிபடும் கடவுளைக்காணுது தவிப்பது பக்தரின் வழக்கம். வைணவ நூல்களில் வைகுண்டத்தில் நித்திய சூரிகளாக இருப்பவர்கள் கடவுளுக்கு பொருந்தியதோற்றத்தையும்உறுப்பையும்பெற்றுஇடைவிடாது ஆனந்தத்தை அனுபவிப்பார்கள் என்று உரைக்கப்பட்டுள்ளது. இதையே பக்தர்கள் வேண்டுவார்கள். ஆனுல் பரதன் இவ்விதமானஆனந்தத்தைக்கோரவில்லை. தனக்கு முன்பிறந்தோன் என்றும், தந்தை என்றும் சுற்றம் என்றும், தெய்வம் என்றும் ராமனைக் கருதி அவன்படும் துயரம் எல்லாம்தான் படவேண்டுமென்று வருத்தத்தைடே தடி அழைத்துக்கொண்டான்.

ராமன் காட்டுக்குப் போன செய்தியைக் கேட்டதும் அடியேனும் புல்மீதோ புலிமீதோ உறங்குவேன். காய்கனியே உட்கொள்வேன். 'மரவுரி உடுப்பேன். சடை தரிப்பேன்என்று சபதம் செய்து ராமன்திரும்பவும் அயோத்தியை அடையும் வரை தானும் நகரத்திற்குச் செல்லாமல் நந்திக் கிராமத்திலேயே தங்கி வந்தான். கடவுளுடன் சாலோக்கிய, சாருப்யத்தை இத்துயர் நிலையில் அனுபவித்த பக்தன் பரதன் ஒருவனேடு ராமனுடன் கூடவே இல்லாவிடினும் அவன் பாதுகையைத் தலைமேல் வைத்து பதினுன்கு வருடங்கள் ஆதற்கு ஆராதனம் புரிந்து ராமனேடு ஒரு புதுவிதமான சாமீப்யத்தையும் அடைந்தான் பரதன். பக்தி என்பது அன்பே உருவானது என்பது பக்தி சூத்ரவாக்கியம் 'அன்பேசிவம்' என்ருர் திருமூலர்.

கலியில் கடவுளை அடைவதற்கு பக்தியே எளிதான வழி என்றுரைப்பது மிகையாகாது. பக்தி செய்வதற்கு அபாரஞானமும் கலைகளில் திறமையும் சாத்திரங்களில் சாமர்த்தியமும் தேவையில்லை. இவ்விதத்தில்தான் பக்தி செய்யலாம் என்ற சட்டுப்பாடும்மில்லை. பக்தியை மனத்தால் செலுத்தலாம், வாயால் பாடலாம், செயலால் காண்பிக்கலாம், தனிமையிலே கடவுளை நினைத்துப் பரவசமடையலாம். கோஷ்டியில் கூடி நின்று குதுகலமடையலாம். குலதர்மத்தையும் சாதி தர்மத்தையும் தாண்டி அணைவருக்கும் ஒரே வழியைக் காட்டி பக்தியானது கடவுளை வழிபடுவோரை ஒன்ருக இணைக்கிறது.


பக்திக்சென்று தனிமுயற்சியும் வேண்டாம். நாம் செய்யும் செயல்கள் யாவையும் கடவுளுக்கு என்று அர்ப்பணம் செய்துவிட்டால் அதுவே பக்தியுடன் செய்யும் பூஜையாகிவிடுகின்றது. பாகவதத்தில் கண்ணனைப் பயத்தாலும் வெறுப்பாலும் மனத்திலே எண்ணினுலே போதுமானது. இடைவிடாது தியானிப்பதுதான் முக்கியம் என்று வியாசர் கூறியிருக்கிருர். ஏனென்ருல் வேற்றுமை எல்லாம் கடவுளின் அருள்பெறும் வரையில்தான். கீதையை உபதேசித்த கண்ணன் பக்தரைப் பற்றிப் பின்வருமாறு கூறினுர்.


'என்னையே எப்பொழும் எண்ணி உயிரை என்னிடம் செலுத்தி என் கதைகளை

(4ம் பக்கம் பார்க்க)

தமிழ் மரபு வழிவந்தோர் வாழும்

# ரினிட்டாட் தீவில் 8 வருடங்கள்!


டாக்டர் வினயகலிங்கம்





இரா. கனகரத்தினம்

**தமிழ்நாட்டைத் தவிர, இலங்கை, சிங்கப்பூர், மலேசியாவில் மட்டும்தான் தமிழர்கள் நிரந்தரப் பிரஜைகளாக வாழ்கிறார்கள் என்பது பலரது கணிப்பு. ஆனால் வட-அமெரிக்காவுக்கும்தென் அமெரிக்காவுக்குமிடையில் ஏராளமானதீவுக்கூட்டங்களில் எல்லாம் தமிழர்கள் குடியேற்றப்பட்டனர். ரினிட்டாட்டுபாக்கோ தீவுகள் முக்கியமானவை. மட்னிக், குவாட், லோப் போன்ற பல தீவுகளிலும் தமிழர் வாழ்கிறார்கள். ஏறக்குறைய 35 ஆயிரம் தமிழர் மரபு வழி வந்தவர்கள் இத்தீவுக் கூட்டங்களில் வாழ்கிறார்கள்.**

**ரினிட்டாட் தீவில் எட்டு வருடங்களை செலவிட்ட டாக்டர் வினயகலிங்கம் அந்த நேரில் பார்த்தவற்றை இப்பேட்டியில் விளக்குகிறார். உலக பண்பாட்டு இயக்க ஸ்தாபகர் குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் அவரைப் பேட்டி காண்கிறார். [ஆ-ர்]**

கரிபியன் கடல் தீவுகளை- அங்கு வாழ்ந்து மறைந்து கொண்டு வரும் நம் தமிழர் மரபு வழி வந்தோரைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் என் நினைவுத் திரையில் தோன்றி மறைபவர் மறைந்த தமிழ்த் தூதர் வண. தனிநாயகம் அடிகளாவர். தமிழ்நாட்டைத் தவிர இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுசளில் மட்டுமே தமிழர்கள் வாழ்கிறார்கள் என்ற பலரது கணிப்பைப் பொய்யாக்கித் தம் தவ வாழ்க்கையின் ஒரு தலையாய பணியாக ஏற்று தமிழர் குடியேறிய நாடுகள் எல்லாம் சென்று அங்கு நம் தமிழர் மரபுவழிவந்தோரின் இன்றைய நிலை பற்றித் தமிழ்கூறும் நல்லுலகத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தவர் தமிழ்ப் பேரறிஞர் வண. தனிநாயகம் அடிகளாரே! தமிழ்நாட்டைச் சேர்ந்த சொ. ம. லே. போன்றவர்கள்கூட இத்துறையில் ஈடுபட்டனராயினும் அவர்களது முயற்சியெல்லாம் தம் பிரயாண அனுபவங்களை விளக்கும் நூல் வடிவங்களாகத் தோன்றிக் காலக்காற்றில் அணைந்துபோயின.

பல வருடங்களுக்கு முன் வண. தனிநாயக அடிகளாரை கண்டியில் அவர் தங்கிய ஆச்சிரமத்தில் சந்தித்து கடல் கடந்து வாழும் தமிழர்களைப் பற்றியும் இத்துறையில் உலகத் தமிழாராய்ச்சி மன்றம் என்ன நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறதென்றும் கேட்டபோது ''கொஞ்சம் இருங்கள்'' என்று கூறிவிட்டு தாம் தமிழ்ப் பயணம் மேற்கொண்ட கரிபியன் தீவுகள் சம்பந்தப்பட்ட கட்டுரைத் தொகுதிகளை என் கைகளில் தந்துவிட்டு ''தம்பி...தமிழாராய்ச்சி மன்றம் தமிழ் ஆராய்ச்சியை மையமாக வைத்து, பலநாட்டுத் தமிழ் அறிஞர்களையும் இணைத்து இயங்கும் ஒரு அமைப்பு. உலகெல்லாம் பரந்து வாழும் தமிழர்கள் துறை அதன் ஆய்வுகளில் ஒரு அம்சமாக இருக்கலாமேயன்றி முழுமையாக நாம் அத்துறையில் தோய்ந்துவிட முடியாது. முடிந்தால் நீங்களே இத்துறையில் ஈடுபட்டு ஒரு அமைப்பை ஏற்படுத்தி முடிந்த பணியை செய்யுங்கள்'' என வாழ்த்தி கரிபியன் தீவுகளில் ஒலிப்பதிவு செய்து கொண்டு வந்த மூன்சாமிகளுய், சரவாட்டி போன்ற தமிழ் மரபு வழிவந்தோர் பாடிய பாடல்களைக்கொண்ட ஒலிப்பதிவு நாடகக்களைப் போட்டுக் காண்பித்து அனுப்பி வைத்தார். அன்று வண தனிநாயகம்அடிகளாரால் தூண்டிவிடப்பட்ட ஆர்வம் ''உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்'' என்ற அமைப்பை தோற்றுவிக்கவும் ''உலகத் தமிழர் குரல்'' என்ற முழுக்க முழுக்க உலகத் தமிழர் செய்திகளைத் தாங்கி வரும் — மாத ஏட்டை ஆரம்பிக்கவும் எனக்கு ஊக்கமூட்டின என்றால் அது மிகையல்ல.

வட அமெரிக்காவுக்கும், தென்னமெரிக்காவுககும் இடையில் ஏராளமான சிறு சிறுதீவுக்கூட்டங்கள். இங்கெல்லாம தமிழர்கள் கொண்டு செல்லப்பட்டுக் குடியேற்றப்பட்டனர். இத்தீவுக் கூட்டங்களுள் மிக முக்கியமானவை இந்த ரினிட்டாட் டுப்பாக்கோ தீவுகள். இத்தீவுகள் தாம் ஏனைய தமிழர் குடியேறிய மாட்னிக், டுவாட்லோப் போன்ற பல தீவுக் கூட்டங்களில் பரந்து வாழ்ந்த தமிழர்களுக்கு தமிழ் மொழி, பண்பாடு, கலாசாரம் என்பனவற்றுக்கு உயிர் கொடுக்கும் சேந்திர நிலையமாக இருந்து வந்துள்ளன. இத்தீவுகளில் இருந்தே ஏனைய கரிபியன் தீவுகளுக்கு நாடகக் கலைஞர்கள், பாடகர்கள் எல்லாம் சென்று தமிழ்ப் பண்பாட்டையும் மொழியையும் வளர்த்தார்கள் என அறிய முடிகிறது. ஒரு காலத்தில் பஞ்ச தந்திரம், நன்னூல் என்பன கற்பிக்கப்பட்டன என்பதும் ராஜா தேசிங்கு, அல்லியரசாணி போன்ற நாடக நூல்கள் புழக்கத்தில் இருந்தன என்பதும் வண. தனிநாயக அடிகளார் தந்து சென்ற சுவையான சிந்தனையைக் கிளறும் செய்திகள். ஏறக்குறைய 35 ஆயிரம் தமிழர் மரபு வந்தோர் இன்றும் வாழும் இத்தீவுக் கூட்டங்களில் இன அழிவு படு வேகமாகி வருகிறது. தமிழினப் புதைகுழிகள் தோன்ற ஆரம்பித்துப் பல வருடங்கள் கடந்துவிட்டன. முற்றாக மறக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்மரபு வழிவந்தோர் அந்நாட்டு மக்களுடன் ஒன்றித்து கரைந்து போய்க்கொண்டிருக்கிறார்கள், இந்த இன அழிவைத் தடுத்து நிறுத்த நாம் என்ன செய்தோம்? உலகெல்லாம் சங்கம் நிறுவித் தமிழ் வளர்க்கிறோம் என முழக்கமிடும் உலகத்தமிழர் அமைப்புக்கள் இத்துறையில் என்ன சாதித்துவிட்டன?

### சந்திப்பில் கிடைத்த தகவல்கள்

தெல்லிப்பழையில் உள்ள டாக்டர் வினயகலிங்கத்தின் வீட்டுவரவேற்புஅறை. கூப்பிய கரங்களுடன் வருகிறார் டாக்டர் வினயகலிங்கம். பேராதனைப் பல்கலைக்கழக இயந்திரவியல் – பொறியியல் சிரேஷ்ட விரிவுரையாளரான இவர் மிகவும் கலகலப்பாக என்னுடன் உரையாடுகிறார். இயந்திரவியல் பொறியியல் தமிழ் இயல் என மூன்று இயலும் சங்கமமாகும் இனப்பற்றுக் கொண்ட ஒரு முத்தான கலவை – சத்தான சிரிப்புக்கு சொந்தக்காரர் – எனது கேள்விக்கெல்லாம் விளக்கமாக பதிலளித்தார் டாக்டர்.

கேள்வி: லண்டனிலிருந்து கரிபியனை நோக்கி நீங்கள் பறந்து கொண்டிருக்கிறீர்கள். பயணம் எப்படியிருந்தது?

பதில்: ஏறத்தாழ 9 மணித்தியாலப்பயணம், ரினிட்டாட் தீவின் கியாக்கோ விமான நிலையத்தைப் பார்த்ததும் நாம் கேள்விப்பட்ட, படித்தறிந்த, பொருளாதார வளம் மிக்க ரினிட்டாட்தீவு இது தானா? என்ற ஐயம் இயல்பாகவே எழுகிறது. மிக மிக இயல்பான மக்கள். விருந்தினரை வரவேற்பதில் முகம் சுழிப்பதில்லை. இப்படி நான் கூறுவதற்கு ஒரு காரணமும் இருக்கிறது. ஏனைய கரிபியன் தீவுகளில் அன்னியருக்கெதிரான வெறுப்புநிறையக்காணப்பட்டாலும் ரினிட்டாட், டுபாக்கோ தீவுகளில் அந்தநிலை இல்லை. மாறாக, மனங்கனிந்த வரவேற்பு.

கேள்வி: இதற்கு என்ன காரணம்?

பதில்: இத்தீவுக் கூட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்ட காலம் தொட்டே ஒரு காலத்தில் வல்லரசு நாடுகளாயிருந்த ஏறக்குறைய எல்லா நாடுகளுமே இங்கு காலூன்றி தம் மிச்ச சொச்சங்களை விட்டுச் சென்றுள்ளன. விமானத்தை விட்டு இறங்கியதுமே நாம் ஆபிரிக்கர்களை, இந்தியரை, ஸ்பானியரை, பிரெஞ்சுக்காரரை, ஆங்கிலேயரை, சீனரை, போர்த்துக்கேயரை, சிரீயா நாட்டினரைப் பார்க்கிறோம். அவர்கள் மொழிகளைக் கேட்கிறோம். காலையில் நித்திரை விட்டெழுந்ததுமே சொந்த நாட்டில் இருப்பது போன்ற ஒரு உணர்வு. ''றேடியோ ரினிட்டாட்''டில் இருந்துவரும் இனிய இந்தி இசை நாம் உலகின் மறுகோடியில் இருக்கிறோம் என்ற நினைவையே மறக்கடித்துவிடுகிறது.

கேள்வி: ரினிட்டாட் பல்கலைக்கழகத்தில் வேலை கிடைத்ததுதான். எல்லாம் புது அனுபவங்கள். இத்தீவுகள், பற்றி... மக்கள் தொகை பற்றி... கூறுவீர்களா?

பதில்: ரினிட்டாட் தீவு என்று நாம் கூறும்போது இத்தீவு 'டுபாக்கோ' என்ற இன்னுமொரு தீவையும் இணைத்தே கூறப்படுகிறது. அதாவது இரு தீவுகளைக்கொண்ட அரசு அது. (Government of Trinidad and Tobago.) ஆரம்ப காலத்தில் (Tobago) டுபாக்கோதீவு தனியாட்சி கொண்ட தீவாக இருந்தபோதும், பொருளாதாரரீதியில் தனித்து இயங்க முடியாது என்ற உண்மை நிலையை உணர்ந்து பொருளாதார வளம் கொண்ட ரினிட்டாட் தீவுடன் ஒன்றாக இணைந்துகொண்டது.

இந்தியாவை தேடிப் புறப்பட்ட கொலம்பஸ் தற்செயலாக - முற்றும் எதிர்பாராத நிலையில் ரினிட்டாட் தீவைக் கண்டு பிடித்தான். தான் கண்டு பிடித்த இத்தீவுக்கு La Trinidad எனப் பெயரிட்டவனும் அவனே. ஆனால் மலைகளால் சூழப்பட்ட பேரழகுத் தீவான டுபாக்கோ இவனது கண்களுக்குப் புலப்படாமலே போய்விட்டது. இத்தீவுகளின் சுதேசிகள் கரிப்ஸ் (Caribs) அரவாக் (Arawaks) என்ற இனத்தவர்களாகும். நீண்ட கால இடைவேளிக்குப்பின் 1688ம் ஆண்டு ஸ்பானிஸ் நாட்டு அரசன் கிறிஸ்தவ மிசனறிகளை இத்தீவுகளுக்கு அனுப்பி வைத்ததன் மூலம் நிலையான குடியேற்றம் ஸ்பெயினால் ஏற்படுத்தப்பட்டது. சுதேசிகளான கரிப்ஸ் அரவாக் இனமக்கள் மலைச்சாரல்களை அண்டி இயல்பான வாழ்க்கையை நடாத்தப்பழக்கப்பட்ட மக்கள். இவர்களை வைத்து தாம் ஆரம்பிக்க விரும்பிய பெருந் தோட்டத் தொழில்களுக்கு உதவிபெற முடியாது என அறிந்துகொண்ட ஸ்பானியர் ஆபிரிக்காக் கண்டத்திலிருந்து அடிமைகளை இறக்குமதி செய்து கொக்கோ, கோப்பி, பழவகை போன்றவற்றைப் பயிரிட ஆரம்பித்தனர். டச் நாட்டவர் பிடியிலும் பிரெஞ்சுக்காரர் பிடியிலும் வீழ்ந்த ரினிட்டாட் 1797ல் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்படுத்தப்பட்டது. இவர்கள் ஆட்சியின்போதே கரும்பு பருத்தி என்பன பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. ஒன்றை நினைவில் நாம் வைத்திருக்கவேண்டும். அமெரிக்காவின் ஆரம்பகாலச் சரித்திரமும் ரினிட்டாட்டின் வரலாறும் ஒன்றோடொன்று தொடர்புடையவையாக இருந்துவந்துள்ளன. அமெரிக்காவில் அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட்டபோது அது ரினிட்டாட் டுபாக்கோ தீவுகளில் அடிமைகளாக வேலை செய்த பல்லாயிரக்கணக்கான ஆபிரிக்கர்களுக்கும் சுதந்திர வாழ்வை ஈட்டித்தந்தது. ஆக, பெருந்தோட்டங்களிலிருந்து ஆபிரிக்கர்கள் பெருமளவில் வெளியேறினர். முடிக்குரிய காணிகளைப் பங்கு போட்டுக் கொண்டு பலர் குடியேறினர். மேலும் பலர் காடுகளையும் மலைச்சாரல்களையும் நோக்கி நகர ஆரம்பித்தனர். பிரிட்டிஸாரால் ஆரம்பிக்கப்பட்ட தோட்டப்பயிர்ச் செய்கைகள் இந்தப்புதிய திருப்பத்தால் ஸ்தம்பித நிலையை அடைந்தது. புதிய தொழிலாளர்களைத் தேடிப் பல நாடுகளுக்கும் வலை வீசப்பட்டது. இந்தக் கட்டத்தில்தான் பொருளாதாரத்தில் சிதைந்து, சமூக ஏற்றத்தாழ்வுகளால் சீர்குலைந்து, பிரிட்டிஸ் ஆட்சிக்குட்பட்டிருந்த இந்தியா எங்கோ பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருந்த ரினிட்டாட் டுபாக்கோ தீவுகளுக்கு கை கொடுக்க முன்வந்தது. ஆக, கப்பல்கள் புறப்பட்டன. ஏழை இந்தியன் ஏற்றுமதிப் பண்டமானான். 1845ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தியா இறக்குமதி 1917 வரை தொடர்ந்தது. (தொடரும்)

# பக்தருள் சிறந்த

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவருடன் ஒருவர் சொல்லிக் களித்து இடைவிடாது இன்புற்றிருப்பார்.'' மேற்கூறிய அம்சங்களில் ஒவ்வொன்றும் பரதனிடத்தில்பொருந்தியிருப்பதை நாம் காண்கிறோம். ராமனை நினைந்து மனம் உருகினான். குகனிடம் சென்று தென்திசை செங்கை கூப்பி எவ்வழி உறைந்தான் நம்முன்? என்று வினவினான், ராமனைக் கண்டதும் பரவசமடைந்தான். அவனையே மனதில் எண்ணி ஆட்சியைநடத்தினான். ராமனுடைய துயருடன் துயரமடைந்து மகிழ்ச்சியுடன் மகிழ்ச்சியுற்றான். ராமனிடத்தில் பரதனுக்கு இருந்த அன்புக்கு எல்லையே இல்லை. கரைகாணுக் காதலன் என்று குகனுக்குச் சொன்ன வாக்கு பரதனுக்குப் பொருந்தும். பரதனுக்கு ராமனிடம் அன்பும் பக்தியுமே மேற்கூறியவாறு சரை புரண்டு ஓட, ராமபிரானுக்கும் பரதனிடம் அளவில்லாத அன்பு இருந்தது என்பதைக் காண்கிறோம். இதைக் கம்பரும் வால்மீகி முனிவரும் ஒருங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். கம்பருடைய அபிப்பிராயத்தில் ராமன் பரதனை தன்னைவிட வேறாகக் கருதவில்லை. ஆழியான் உலகத்தை பரதனே ஆள, தாழியாரும் சடைகள் தாங்கி காட்டில் முனிவரோடு ஏழிரண்டு ஆண்டுகள்வாழ்ந்து திரும்பிவா என்று கைகேயி ராமனிடம் சொன்னபோது ராமன் அவளுக்குக் கூறிய பதில் அவனுக்குப் பரதனிடம் இருந்த அன்பைக்காட்டுகிறது.

''என் பின்னவன் பெற்ற
செல்வம்
அடியேன் பெற்றதன்றோ''


என்றான் ராமன்.

விபீஷணன் ராமனிடம் வந்து சரணடைந்தபோது அவனை பகைவன் தம்பியானதினால் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று ஆலோசனை சொன்னார்கள். இதையெல்லாம் கேட்ட ராமன் சரண் புகுந்தவர்களிற்கு அடைக்கலம் தந்தே தீருவேன்' என்று சொல்லிவிட்டு நாட்டையும் வீட்டையும் துறந்து மாதாவையும் மனையாளையும் மறந்து ராமனே கதி என்று காட்டுக்கு வந்த லட்சுமணனிடம் ''குழந்தாய் தம்பிமார் அனைவரும் பரதனைப்போல் இருப்பார்களா?' என்று சொன்னதாக வால்மீகி வாக்கு. பக்தருள் சிறந்து பரமனின் அருளைப் பூரணமாக பெற்ற பக்தன் பரதனே!

## விபத்தினால் ஒன்றுசேர்ந்தனர்

பராகுவேயில் இரண்டு கார்கள் ஒரு சந்திப்பில் மோதிக்கொண்டன. காரசாரமான விவாதம் இடம் பெற்றபின்னர் மோதியவர்கள் இருவரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்பது தெரியவந்தது. 31 ஆண்டுகளுக்கு முன் பிறந்த பயர்ரி, ஜேக்தயஸ்ராம் என்ற அவர்களை இந்த விபத்து ஒன்றுசேர்த்தது.

## தொடர் நவீனம்



-செங்கை ஆழியான்

# யாககுண்டம்

[6]

விடிந்து வெகு நேரமாகியும் படுக்கையைவிட்டு எழாது சரவணமுத்தர் வாங்கில் படுத்திருந்தார். பனிப்புகாரில் முற்றம் தண்ணெனக் குளிர்ந்திருந்தது. இரண்டு அறைகளும் குசினியும் விறுந்தையும் கொண்ட அந்த வீட்டின்முன் இடப்பட்ட தலைவாசல் அவருக்குப் பிரியமான வசிப்பிடமாக விளங்கியது.

சந்திரனின் படிப்புடன் கைநழுவிப்போன அவர் மாளிகை, மீண்டும் வரப்போவதில்லை. வியர்வையைச் சிந்தி அவர் கட்டி ஆசையுடன் வாழ்ந்த அந்த வீடு இனி அவருக்குக்கிடைக்காது. அதனை அறவிலைக்கு விற்றுக் கடன்களைத் தீர்த்தபின், எஞ்சியிருந்த வெறுங் காணியொன்றில் இச்சிறிய வீட்டைக்கட்டிக்கொண்டு குடிவந்தனர்.

இந்த வீட்டை அவர் விரும்பிக்கட்டவில்லை. ஏதோ பிள்ளைகளுடன் நிம்மதியாக வாழக் கட்டினார்,

'ஏதோ அப்பரின் முதுசக் காணிகள் ஒன்றிரண்டு இருந்தால் கௌரவமாக வாடகை வீடுகளில் குடியிருக்காமல் தப்பினன். இப்ப மிஞ்சியிருக்கிறது பனங்காணி ஒன்றும் இந்தக் குடியிருக்கிற இரண்டு பரப்புந்தான். ஒவ்வொரு பரப்பாக மல்லிகாவுக்கும் சுசிலாவுக்கும் கொடுத்துவிட்டு, பனங்காணியில் ஒரு பக்கமாக ஒரு குடிசையைப்போட்டுக் கொண்டு போய்விடவேண்டியது தான்'

இராசம்மா எழுந்து வருவது தெரிந்தது. அவள் தலைவாசலுக்கு வந்து அவர் கால்மாட்டில் அமர்ந்தாள்.

''என்னப்பா, இன்னமும் எழும்ப வில்லை.''

''சும்மா படுத்திருந்தன். சரியான பனி கண்டியோ?''

அவர் கால்களில் அவற்றைப் பிடித்துவிடுமாப்போல அவள் வலது கரத்தை வைத்தாள்.

''கொத்தியடி வயலை மறந்து விடுங்கோ. ஆனைப்பட்ட மாளிகைபோன்ற வீடே கைவிட்டுப்போனபோது கலங்காத நீங்கள். இந்த வயலுக்காக...''

அவர் மனைவியை ஆழமாகப் பார்த்தார்.

''இரத்தினம் வயலை வாங்கும்போது, வட்டியோட தந்தால் திருப்பித்தாறன் எண்டவன். அவன் பேச்சு மாறிப் போட்டான். அது தான் கவலை.''

''இப்ப இரத்தினம் தாறன் எண்டு சொன்னால் வாங்கிவிடுவியளோ?''

அவர் கால்களை இழுத்துக் கொண்டார். மனைவியின் கேள்வி அவரைத் தாக்கிவிட்டது உண்மைதான்.

வேலை வெட்டியில்லாமல் திரிந்த மூத்தவன் பார்த்திபனை சவுதிக்கு அனுப்புவதற்காகத்தான் கொத்தியடி வயல் விற்கப்பட்டது. அவன் சவுதியில் இன்ரகொன்ரினன்றல் ஒட்டலிலே நல்லவேலையிலிருக்கிறான். ஆறு வரியமாகுது. மாதாமாதம் ஆரம்பத்தில் மூவாயிரம் வரையில் அனுப்பிவந்தான். பின்னர் குறைந்துபோனது. 'சும்மா சொல்லக்கூடாது. மூன்றாவது மகனை பிரான்சிற்கு அனுப்ப ஐம்பதினாயிரம்வரை அவன் தான் செலவு செய்தான். ஈஸ்வரியைக்கனடாவிற்கு அனுப்பி பொன்னரப்பாவின் மகனுக்குத் திருமணம் செய்துவைக்கவும் அவன் தான் காசு அனுப்பியவன். கொத்தியடி வயலை மீட்க ஏனோ அவன் எதுவும் செய்யவில்லை' என இராசம்மா எண்ணிக்கொண்டாள்.

''மூத்தவன் என்ன செய்வான்? அவன் ஒருத்தன்தான் எங்கட பிரச்சினையில கை கொடுக்கிறவன். எவ்வளவோ செய்திட்டான். இப்ப அவனுக்கும் குடும்பம்... மனைவி பிள்ளைகள் என்று ஆகிவிட்டது. இனியும் அவனை நாங்கள் எதிர் பார்க்கக்கூடாது'' என்றாள் இராசம்மா. மனைவி சொல்வது சரியாகப்பட்டது. அவர் மீண்டும் படுக்கையில சாய்ந்து கொண்டார்.

சந்திரனால் அவருக்குக் கிடைத்த ஏமாற்றத்தைப் பார்த்திபன்தான் ஓரளவு தீர்த்தான். அவர் பேசி ஒழுங்குபடுத்திய பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு வெளிநாட்டிற்குச் சென்றான். நல்லதொரு மருமகள் கிடைத்த மகிழ்ச்சி இருவருக்கும். டொனேசனாகக் கிடைத்த பணம் ஒரு லட்சம், இரண்டாவது மகள் தவமலரின் திருமணத்திற்குக் கைகொடுத்தது.

''மல்லிகாவுக்கும் வயதாகிறது.........அவளின்ர அலுவலையும் ஒருமாதிரி முடித்து விட்டால் நிம்மதி.''

''அவளை அங்க கூப்பிடப் போறதாக மூன்றாவது மகன் எழுதியிருந்தான். அவளும் ஏதோ கொம்பியூட்டர் வகுப்பிற்குப் பேகிறாள்.''

அவசரமாகஇராசம்மாகுறுக்கிட்டாள்; ''இப்ப என்னோட இருக்கிற பெட்டையளை வெளிநாட்டிற்கு அனுப்பவும்மாட்டன் வெளிநாட்டில வேலைசெய்யிறவைக்குக் கட்டிக்கொடுக்கவும்மாட்டான். அதுகளின்ர பிள்ளையளையாவது தூக்கி வளர்க்கிற பாக்கியம் இந்தப் பாவிக்குக் கிடைக்கட்டும்.''

அவள் தன் கசிந்த விழிகளை முந்தானையால் துடைத்துக் கொண்டாள்.

மனைவியின் இதயத்தில் உழலும் வேதனையை அவர் உணராமலில்லை. அவருக்கு மட்டும் தன் பேரப்பிள்ளைகளைத் தூக்கிக் கொஞ்சி மகிழவேண்டும் என்ற தவிப்பு இல்லையா?

உறவுகள் திக்கிற்கொன்றாகச் சிதறிவிட்டன. யாழ்ப்பாண மண்ணின் கூட்டுக் குடும்ப வாழ்வு வெளிநாட்டுப் பயணங்களால் சீர்குலைந்து போய்விட்டது. மழலைக்குரல்கள் யாழ்ப்பாண வீடுகளில் ஒலிப்பது குறைந்துவருகிறது.

மல்லிகா கொண்டுவந்த தேநீரைப் பெற்றோர் வாங்கிப் பருகினர்.

''இண்டைக்கு வகுப்பிருக்குதா?'' என்று அவர் மகளைக் கேட்டார்.

''இல்லை.........,என்றாள் மல்லிகா: ''ஏன் அப்பா?''

''இண்டைக்கு மணியம் பங்கு போடுகிறான் ஆட்டிறைச்சி வாங்க.''

''நான் சமைக்கவோ?''

''இல்லை......... வகுப்பில்லாவிட்டால் ஆற அமர வடிவாச் சாப்பிடுவாய் என்றுதான்.''

அவள் சிரித்துக்கொண்டு சென்றபின் அவர் மனைவியைப் பார்த்தார்.

''நீ எங்கயாவது மல்லிகாவுக்கு மாப்பிள்ளை பார்த்து வைச்சிருக்கிறாயா?''

வாசலில் ஒரு மோட்டார் சயிக்கில் உறுமியபடி வந்து நின்றது. புதிய யப்பானிய தயாரிப்பு என்பது அதன் பளபளப்பிலிருந்து தெரிந்தது.

படலையைத் திறந்து கொண்டு வருபவனை இராசம்மா அடையாளம் கண்டு கொண்டாள். அவள் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

''உன் கொண்ணற்ற மகன் போல இருக்குது.........''

''ஓமோம் கனகரத்தினம் தான். நல்லா வளர்ந்திட்டான். மோட்டார்சயிக்கிலும் வாங்கியிருக்கிறான்போல இருக்குது. வா, தமபி, வா...''

இராசம்மா எழுந்து முற்றத்துக்கு வந்தாள். அவனை வீட்டிற்குள் அழைத்துச் செல்லும் விருப்புடன் முன நடந்தாள்.

அவன் சற்றுத் தயங்கி நின்றான். நடுத்தர உயரம, கட்டு மஸ்தான உடல் வாகு. மங்கலான நிறம், தடித்த மீசை, லோங்ஸ் சேட், கழுத்தில் ஒரு மெல்லிய செயின்.

''மாமாவிடம் கதைத்து விட்டு வாறன் மாமி......'' என்றபடி தலைவாசலுக்குள் பிரவேசிக்க, சரவணமுத்தர் வாங்கிலிருந்து எழுந்து அமர்ந்தார். அவன் அவர் கால்களைக் குனிந்து தொட்டபோது, ''நல்லா இரு தம்பி'' என்று ஆசீர்வதித்தார். அவன் வளர்ந்திருக்கிறான். ஆனால் புங்குடுதீவு மண்ணிற்குரிய பண்பு அற்றுப்போய்விடவில்லை.

அவன் தலைவாசலில் இடப்பட்டிருந்த கதிரையொன்றில் அமர்ந்து கொண்டான். முற்றத்தில் நின்றிருந்த இராசம்மாவும உள்ளே வந்து வாங்கில் அமர்ந்து கொண்டாள். அடுக்களைக்குள்ளிருந்த மல்லிகாவும் சுசிலாவும எட்டிப் பார்த்துவிட்டுத் தலையை உள்ளே இழுத்துக்கொண்டனர்.

''வீட்ல எல்லாரும் சுகமோ?''

''எல்லாரும் சுகம், மாமி. அம்மாவுக்குத் தான் பனிக்கு வாற இழுப்பு இப்பவும் இருக்குது. தங்கச்சிக்கும் கலியாணம் பேசி முற்றாக்கிப்போட்டம். என்னோட படிப்பிக்கிற பொடியன். நல்ல பையன்.''

''சந்தோசம்.'' என்றார் சரவணமுத்தர். ''தம்பி, இப்ப எங்க படிப்பிக்கிறாய்?''

''வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில், மாமா.''

''றெயினிங் முடிஞ்சுதோ...''

''ஓமோம்'' என்று கனகு சிரித்தான். தங்கச்சியைப் போய் பார்த்துவிட்டு வா. ராத்திரி கெட்ட கனவுகள் கண்டன் எண்டு காலமையே துரத்திவிட்டார்.''

இராசம்மா நெகிழ்ந்து போனாள். அவள் உள்ளம் மனதிற்குள் 'அண்ணை' என்ற பாசத்தோடுகூவிக்கொண்டது.

சரவணமுத்தர் கனரத்தினத்தை நிமிர்ந்து நோக்கினார். அப்போது தேநீருடன் மல்லிகா வந்தாள். றேயினை அவன் முன் நீட்டியபடி கேட்டாள், ''ஏன் மச்சான், வெளி நாட்டுக்குப் போகலாமே? போகவில்லையோ?''

அவன் தம்ளரை றேயில் இருந்து எடுத்தபடி, அவளை ஏறிட்டுப் பார்த்தான்., இந்தக்காலத்துப் பெட்டையளின்ர துணிச்சலைப் பார். என்ன துணிச்சலாக அதுவும் எங்களுக்கு முன் வெட்கமில்லாமல் மச்சானுடன் கதைக்கிறாள். முன்பு இவர் ஊருக்கு வந்த போது எதிரில் வரவே எனக்கு உயிர்போய்விடும். வலு முன்னேற்றம் தான்.' என்று இராசம்மா எண்ணிக் கொண்டாள்.

''ஏன் மல்லிகா, வெளி நாட்டிற்குப் போக வேண்டும்?''

அவன் கேள்வி மல்லிகாவைச் சற்றுத் திக்குமுக்காட வைத்து விட்டது.

''நல்லா உழைக்கலாம்... பணம் சேர்க்கலாம்.'' என்றாள் தட்டுத்தடுமாறி.

''பணம் மட்டுந்தான் வாழ்க்கை என்று நான் நினைக்கவில்லை.''

சரவணமுத்தர் வியப்புடன் அவனைப் பார்த்தார்.

''அப்ப?...''

''பணத்தை இங்க உழைக்கலாம். நான் றெயின் ரீச்சர் தான். அந்தத்தொழிலோடு திருப்தி கண்டிருக்கிறன். தோட்டம் செய்யிறன். ரியூசன் கொடுக்கிறன். மேலதிக வருமானம் எனக்குக் கிடைக்கிறது. அதுபோதும். இந்த மண்ணில வாழ்கிற நிம்மதி எங்கும் வராது. மல்லிகா, என் வீட்டிலிருந்து புறப்பட்டு வரும்போது நான் பழகிய இடங்கள்இருபுறங்களும் கடல் விரிந்து கிடக்க நடுவே நீண்டு கிடக்கும் தார்வீதியில் வரும் போது உள்ளத்தில் ஏற்படும் உவகை வெளிநாட்டில் வருமா? தாய் தகப்பனோட சகோதரங்களோட பேசி மகிழ்ந்து நண்பர்களோட மதகுகளில் இருந்து பேசிச் சிரித்து... இதெல்லாம் வெளி நாட்டில கிடைக்குமா?''

சரவணமுத்தர் மீண்டும் ஒரு தடவை நிமிர்ந்து உட்கார்ந்தார்;. 'நான் நினைச்ச மாதிரி கனகு விளையாட்டுப் பிள்ளையல்ல'

மல்லிகாவின் முகம் சிவந்து விட்டது, மச்சானிடம் வார்த்தைகளில் தோற்கிறேன் என்பதால்.

''அப்ப வெளிநாட்டிற்குப் போனவையெல்லாம்விசரரே?''

''அப்படி நான் சொல்லவில்லை. இரண்டு காரணங்களுக்காக இளைஞர்கள் வெளி நாடுகளுக்குச் சென்றனர். இந்த நாட்டில் நிகழ்ந்த இராணுவ நடவடிக்கைகள்... வன்செயல்கள் இளைஞர்களின் உயிர்களுக்குப் பாதுகாப்பாகவில்லை என்பது ஒன்று. மற்றயது இங்கு தகுந்த தொழில் கிடைக்காமல் உழைப்பினைத் தேடிச் சென்றனர். இது இரண்டும் ஏற்கக்கூடிய காரணங்கள் தான்: ஆனால் என் மச்சான் டொக்டர் சந்திரன் ஏன் வெளிநாட்டிற்குச் செல்லவேண்டும்? என் மச்சான் இஞ்ஜினியர் மோகன் ஏன் வெளிநாட்டிற்குச் செல்ல வேண்டும்? இவர்களுக்கு இங்கு தொழில் இல்லையா? இது இவர்கள் இந்த மண்ணிற்குச் செய்கிற துரோகம்,''

''சம்பளம் காணுது, வெளி நாட்டிற்குப் போயினம். அங்க எடுக்கிற சம்பளம் இங்க எடுக்கலாமோ?'' என்ற மல்லிகாவை கனகரத்தினம் ஆழமாகப் பார்த்தான்; அவள் எழில் விழிகள் ஏமாற்றத்தால், தோல்வியால் கலங்கிச் சிவப்பதை அவன் காணநேர்ந்தது. அவன் தன் குரலை மென்மையாக்கிக் கொண்டான்.

''இதோ பார், மல்லி. ஓரளவுக்குத் தான் பணந் தேவை. மனிசனுக்கு அத்தியாவசியமானவற்றைப் பெறப் பணந்தேவை. அதுக்குமேல் என்னத்துக்கு?''

''அப்ப நீங்கள் வெளிநாட்டிற்குப் போகமாட்டியள்?''

''நிச்சயமாகப் போகமாட்டன்.''

''வீடு வாசல்... ரீவி...டெக் கார்..இத்தகையவசதிகளைஇங்கிருந்தால் பெறமுடியுமா?''

கனகரத்தினம் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

''இவற்றைப்பெற வெளிநாட்டிற்கா போகவேண்டும்? எனக்கு நல்ல வசதியான வீடு இருக்கிறது. கலர் ரீ.வி. இருபத்திநான்கு இஞ்சியில் வாங்கி வைத்திருக்கிறன். டெக் இருக்கிறது. இப்ப ஹொண்டா மோட்டார்சயிக்கில் இருக்கிறது. இன்னும் சில நாளில் கார்வாங்க மாட்டேன் என்பது என்ன நிச்சயம்''

அவள் வாயடைத்துப் போனாள். சரவணமுத்தர் கலகலவெனப் பெருங்குரலில் நகைத்தார்.

''என் வீட்டில் எல்லாமே வெளிநாட்டுப் பயித்தியங்கள்......'' என்றார்.

கனகரத்தினம் அன்று மதியம் மாமாவீட்டில் தான் உணவருந்தினான். அவன் அடிக்கடி மல்லிகாவுடன் பேச விழைவதை இராசம்மா அவதானிக்கத் தவறவில்லை. மனத்திற்குள் இனந்தெரியாத குதூகலம் ஏற்பட்டது. அன்று பிற்பகலில் அவன் விடைபெற்றுச் சென்றான்.

இரவு படுக்கைக்குப் போகும் போது இராசம்மா மல்லிகாவிடம் மெதுவாகக் கேட்டாள்: ''ஏன் மல்லிகா, கனகு நல்ல பையன் என்ன?''

மல்லிகாவின் பதில் வெடுக்கென அமைந்தது.

''உங்களுக்கென்ன விசரா, அம்மா, அவர்ஒரு றெயின் ரீச்சர். என்ர அண்ணன்மார் இருக்கிற ஸ்ரேற்றசுக்கு...... அப்படியொரு எண்ணத்தை மனதில வைச்சிருக்கவேண்டாம்.சொல்லிப்போட்டன்.'.

இராசம்மாவின் மலர்ந்த இதயம் பட்டென வாடியது'

(தொடரும்)

---

அறவுரை

### விளக்கைச் சூழ்ந்து பலர்

''அமாவாசை நடு இரவு; நள்ளிருள்.ஒரு விளக்கு எரிகின்றது. அந்த விளக்கைச் சூழ்ந்து பலர் இருக்கிறார்கள். ஒருவன் அறிவு நூல்களை ஓதுகின்றான். ஒருவன் புத்தகத்தில் ஐந்தெழுத்தை எழுதிக்கொண்டிருக்கிறான். ஒருவன் பொய்க் கணக்கு எழுதிக்கொண்டிருக்கின்றான். ஒருவன் தன் மாற்றானைக்கொல்ல மருந்து ஆயத்தம் செய்துகொண்டிருக்கின்றான்.

இத்தனை விதமான செயல்களும் விளக்கின்றி நிகழவில்லை. விளக்கின்றிப் படிக்கமுடியாது. விளக்கின்றிப் பொய்க் கணக்கு எழுதமுடியாது. நன்மையான செயல்களுக்கும் தீமையான செயல்களுக்கும் விளக்கின் ஒளியே காரணமாகும். ஆனால் நன்மை தீமைகளால் விளையும் புண்ணிய பாவங்களுக்கு விளக்குக்காரணமாகாது அதுபோல அவரவர்கள் செய்யும் நன்மை தீமைகளின் பயன்கள் அந்த ஆன்மாக்களையே சாரும்.''

— வாரியார் விருந்து

# பல்சுவை விருந்து

## குடும்பத்தில் நூறு பேர்

ஹபீஸ் குலாம் குலாதீர் என்ற ஆப்கானியருக்கு 150 வயது. இவர் தன்னைவிட 100 வயது குறைந்த பெண்ணை கடைசியாக மணந்துகொண்டிருக்கிறார். குலாதீன் உயிருடன் வாழும் மூத்த மகள் வயது 90. இவர் குடும்பத்தில் மொத்தம் 100 பேர் வரை இருக்கிறார்கள். தான் நீண்டநாள் வாழ தனது சாதாரண பழக்கங்களே காரணம் என்கிறார்.

இவர் குடிப்பதில்லை, புகைப்பதில்லை. தினமும் தானே கடைக்குப் போய்வருகிறார். ஒரு இளம் வாலிபனின் வேகம் உற்சாகம் எல்லாம் தன்னிடம் இருப்பதாக அவர் கூறுகிறார்.

## ரோஜா மயக்கம்

புகழ்பெற்ற பிரெஞ்சு புரட்சி எழுத்தாளரான வால்டேருக்கு ஒருவித அலர்ஜிநோய் இருந்தது. இவர்எப்போதும் ரோஜா மலரை முகர்ந்தாலும் உடனே இவருக்கு தலைசுற்றும். உடனே மயக்க முற்றுவிடுவார்.

## மலேரியா

மலேரியா என்ற சொல் இத்தாலியச் சொல்லாகும். இந்தச் சொல்லுக்கு அந்த மொழியில் உண்மையான அர்த்தம் அசுத்தக் காற்று என்பதே. மலேரியா நோய் உண்டாக அசுத்தக்காற்றே காரணம் என்று இத்தாலிய விஞ்ஞானிகள் நம்பினர்கள்.

## அதிக விற்பனை

சீனவில் சீனச்சிறுவர் செய்தி என்ற வாரப் பத்திரிகை வெளிவருகிறது. உலகிலேயே மிக அதிகமாக விற்பனையாகும் சிறுவர் பத்திரிகை இது தான். இது வாரம் தோறும் ஒரு கோடியே பத்துலட்சம் பிரதிகள் விற்பனையாகிறது.

ஃ ஃ ஃ

## முதல் எயர் மெயில்

தொலைதூரத்திற்கு விமானம் மூலம் தபால்களை எடுத்துச் செல்லும் முதல் எயர் மெயில் சர்விஸ் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1918 மே 15ம் தேதி.

ஃ ஃ ஃ

## கடல் நீரில்

கடல் நீர் எவ்வளவு உப்புத் தன்மை உடையது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு கலன் நீருக்கு 4 அவுன்ஸ் வீதத்தில் உப்பு இருக்கிறது.

ஃ ஃ ஃ

## பாம்புக் கடி....

இந்தியாவில் ஆண்டு தோறும் ஏறக்குறைய 25.000 பேர் பாம்புக்கடியினல் பலியாகிறார்கள்.

ஃ ஃ ஃ

## அதிக வயதான தாயும் இளவயதான தாயும்!

உலகிலேயே மிக அதிக வயதில் தாயான பெருமையைப் பெறுகிறார் தென்அமெரிக்க பெண்மணி டாவிடு-பிளாஸில். 1969 ஜூலை 16ம் நாள் ஜோகன்ஸ்பர்கில் தனது 58வது வயதில் 5 ரூத்தல் நிறையுள்ள பெண் குழந்தையை பெற்றெடுத்தார். இவருக்கு முதலில் 8 பிள்ளைகளும் 12 பேரப்பிள்ளைகளும் இருக்கின்றனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த 9 வயது சிறுமி ஒரு குழந்தைக்கு தாயாகியுள்ளார். இவள் கடந்த வருடம் நவம்பர் 12ம் தேதி தனது 9வது பிறந்த நாளைக் கொண்டாடினர்.

இவளுடைய பெற்றோர் குடியானவர்கள். இவர்களுக்கு 6 பிள்ளைகள். மார்தா இரண்டாவது குழந்தை.

1988 வருடம் டிசம்பர் 16ம் தேதி இந்த 9வயது சிறுமிக்கு குழந்தை பிறந்தது. அழகான பெண் குழந்தை. 2 கிலோ 300 கிறும் நிறை. சத்திர சிகிச்சை மூலம் குழந்தை பிறந்தது. இக்குழந்தைக்கு லூசி எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இன்று உலகில் மிக இளம் தாய் மார்தா தான் இக்குழந்தைக்கு தந்தை 18 வயதான ஒரு சொந்தக்கார இளைஞன். இருவருக்கும் திருமணம் செய்ய ஏற்பாடாகியுள்ளது,

# காமராஜரும் கருணாநிதியும்

காங்கிரஸ்கட்சியின் முதல்வராக இருந்த காமராஜர் ஒரு கூட்டத்தில் பேசும்போது கருணாநிதி பக்குவம் இல்லாதவர் என்று குறிப்பிட்டுவிட்டார்.

எதற்கும் விளக்கம் கூறும் கருணாநிதி மேற்படி காமராஜரின் கூற்றுக்கும் விளக்கம் கொடுத்தார்.

காமராஜர் என்னைப் பக்குவமில்லாதவர் என்று குறிப்பிட்டதை நான் மனமார வரவேற்கிறேன். காரணம் குடும்பப் பெண்ணானவள் உலையில் அரிசியைப் போட்டால் அவ்வரிசி வெந்து பக்குவமாகும் வரை வேறு அலுவல்களைக் கவனித்துக்கொண்டு இருப்பாள்.

எந்தவொரு பெண்ணுயிருந்தாலும்சரி அரிசி பக்குவமாய் வருவதற்கு முன்பு அடுப்பில் இருந்து பானையை இறக்கவேமாட்டாள். அதுபோலத் தான். ஆட்சிபீடம் என்ற பானையில் இருந்த காமராஜர் பக்குவமாகிவிட்டார் என்பதனுல் அவரை மக்கள் இறக்கி விட்டார்கள்.

கருணாநிதியும் அவரது சகாக்களும் என்னும் பக்குவமாகவில்லை. ஆகவே மக்கள் ஒரு போதும் இறக்கமாட்டார்கள் அடுத்த தேர்தலிலும் எங்களை ஆட்சிப்பீடம் ஏற்றுவார்கள். காரணம் காமராஜர் கூறியது போல் நாம் என்னும் அரசியலில் பக்குவமாகவில்லை.

ஆகவே காமராஜர் அவர்கள் எங்களை அடுத்த தேர்தலிலும் தெரிவுசெய்யும்படி சொல்லாமல் சொல்லிவைத்ததற்கு எனது நன்றி என்று கூறினர்.

## அதிசயப் பிறவிகள்!

உலகிலேயே மிக இளவயது மருத்துவ மாணவன் முரளி. இவருக்கு வயது பதினொன்றுதான் இவன் பால்டி மோர் பள்ளியில் பட்டம் பெற்றுவிட்டுஇப்போது மருத்துவ பல்கலைக் கழகத்தில்சேர்ந்துள்ளான். மூன்று வயதில் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப்போன இவன் 11 வயதில் இந்தப் பெருமையைப்பெற்றது ஆச்சரியம் தான். இவனது அறிவுத்திறமைக்கு ஏற்ற பாடத்திட்டம் பள்ளிகளில் இல்லை என்கிறது இப் பல்கலைக் கழகம். பாலமுரளி ம்பாடியின் அண்ணன் 'எய்ட்ஸ்' நோய் பற்றி ஒரு புத்தகம் எழுதி ஏற்கனவே உலகப் புகழ் பெற்றிருக்கிறார்.

ஃ ஃ ஃ

1964ம் ஆண்டு பாந்தியான் புக்ஸ் நியுயோர்க்கில் வெளியிட்ட ஒரு புத்தகம் How the Word Began இந்த புத்தகத்தின் ஆசிரியை Dorothy Straight இவருக்கு என்ன வயது தெரியுமா? தனது நான்காவது வயதில் இந்த புத்தகத்தை எழுதி ஆறுவது வயதில் வெளிட்டிருக்கிறுள்!

## திரைப்பட சாதனை

இதுவரை உலகிலேயே வசூல் முறியடிக் கப்பபடாத சாதனை கொண்ட படம் (Gone with the wind) (1939) 382. 7 மல்லியன் டாலர் வசூல். அடுத்த படம் Star Wars (1977) 187.8 மில்லியன் டாலர். மூன்றுவது The Sonnd of-Music வசூல் 173. 8 மில்லியன் டொலர்.

## பாதுகாப்பு

ஆபத்து வந்துவிட்டால் ஒரு குறிப்பிட்ட முதலையினத்தைச் சேர்ந்த பெண் முதலை தன் குட்டிகளை தனது வாய்க்குள் போட்டு மறைத்துவிடும்.

ஃ ஃ ஃ

## இறுதிச் சடங்கு ரூ. 10 லட்சம் செலவு

ஜேர்மானிய கவிஞர் வெர்ஜில், ஈ ஒன்றை தனது செல்லப்பிராணியாக அக்கறையுடன் வளர்த்தார். இந்த ஈ இறந்தபோது இவர் பெருந்துயரில் ஆழ்ந்தார், அந்த ஈயின் இறுதிச் சடங்கிற்கு மட்டும் 10 லட்சம் ரூபாவரை செலவு செய்தார். அதுமட்டுமல்ல அந்த ஈயைப் புதைத்த இடத்தில் ஞாபகச் சின்னமொன்றையும் பெரிதாகக் கட்டினர்.

—தனு

## தபால் முத்திரை தரும் அதிர்ஷ்டம்

தபால் முத்திரைகளை வாங்கி விற்கும் ஒரு ஸ்தாபனம் லண்டனில் உள்ளது. ஸ்டான்லி இப்பன்ஸ் என்பது இந்தக் கடையின் பெயராகும். அதிசயமான அரிய தபால் முத்திரைகளை இங்கு வாங்குவதற்கு பலத்த போட்டி. இவர்கள் முதலில் செய்யவிரும்பும் மொத்தத் தொகை ஒன்றரை கோடி ருபாவாகும்.

இந்த ஸ்தாபனத்தில் உள்ள தபால் முத்திரைகளின் மதிப்பு 45 லட்சம் ரூபாவாகும். 1856-ம் ஆண்டு வெளியிடப்பட்ட பிரிட்டிஷ் கயானு ஒரு சென்ட் தபால் முத்திரை மிக சிறிய அளவில் இருந்தாலும் அதன் மதிப்பு 45 லட்சம் ருபாவாகும்.

இந்த ஸ்தாபனம்125ஆண்டுகளாக இங்கு இயங்கி வருகின்றது. 1840-ம் ஆண்டு முதன் முதலாக தபால் முத்திரைகள் வெளியிடப்பட்டன. 16 ஆண்டுகளுக்குப் பின்னர் தான் முத்திரைகளை பொழுது போக்காகச் சேகரித்துப் பரிமாறிக்கொள்வதும் பின்னர் விற்பனை செய்வதும் ஆரம்பமானது.

ஸ்ரான்லி இப்பன்ஸ் தனது தந்தையின் மருந்துக்கடையில் ஒரு மேசையை வைத்து பழைய முத்திரைகளை வாங்கி விற்கும் வேலையைத் தொடங்கினர். உலகிலேயே மிகப் பெரிய அளவில் முத்திரைகளை வாங்கி விற்கும் ஸ்தாபனம் இன்று இதுதான்,

# ஞாயிறு மஞ்சரி.

## விசித்திர பழக்கங்கள்

### இடையில் விழித்து

பிரெஞ்சு எழுத்தாளரான மைக்கேல் மாண்டேகு என்பவரை தூங்கும்போது யாராவது ஒருவர் அடிக்கடி எழுப்பிவிட்டுக்கொண்டே இருக்க வேண்டும். இப்படி இரவில் பலமுறை இடையிடையே விழித்துத் தூங்குவதையே இவர் விரும்பினர். இவர் இதற்கென்றே ஒரு வேலைக்காரனை அமர்த்தியிருந்தார்.

ஃ ஃ ஃ

### பகலில் தூக்கம்

சார்லஸ் கே. ஆக்டின் என்ற தத்துவமேதை விடிவதற்கு முன் எந்தக் காலத்திலும் தூங்கப் படுக்கைக்குப் போவதில்லை. இரவெல்லாம் தூங்காமல் லண்டன் நகரத்து தெருக்களிலும் கேம்பிரிட்ஜ் வீதிகளிலும் அலைந்து திரிந்துவிட்டு விடிய ஆரம்பிக்கும்போது தூங்கச் செல்வார்.

ஃ ஃ ஃ

### அதிகாலை தூக்கம்

ஹென்றிலி வார்னர் என்ற எழுத்து மேதையோ சூரிய அஸ்தமனத்திலிருந்து விடியும் வரை இலக்கியப் படைப்பில் ஈடுபடுவர். அதிகாலை 4மணிக்கு உணவை உட்கொண்டுவிட்டு தூங்க ஆரம்பிப்பார். மாலையில் எழுந்தே மீண்டும் வேலையில் ஈடுபட ஆயத்தமாவார்.

ஃ ஃ ஃ

### 130 தடவை உடைமாற்றம்

ஆஸ்திரிய இளவரசன் வென்சல் ரியாட்பார்க் ஒவ்வொரு நாளும் 30 தடவை உடை மாற்றிக் கொள்ளும் இயல்புடையவர்

### பழைய உடை

இங்கிலாந்து மன்னரான முதலாம் ஜேம்ஸுக்கு புதிய உடை அணிவது பிடிக்காது. பழைய உடையையே கந்தலாக இருந்தாலும் தைத்து நார்நாராக கிழிந்து தொங்கும்வரை உடுத்துவார்.

ஃ ஃ ஃ

### அழுக்கு உடையில்

விஞ்ஞானி சார் ஐசாக் நியுட்டனும் கிழிந்த அழுக்கு உடைகளையே அணிவார் பாராட்டு விழாக்களிலும்கூட சிறிது கவனம் செலுத்தாமல் பிச்சைக்காரரின் தோற்றத்தில் செல்வார்.

### எழுத்து வடிவம் கிடையாது

இந்தியாவில் 800க்கும் அதிகமான மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றில் பலவற்றிற்கு எழுத்துவடிவம் கிடையாது. பேச மட்டுமே முடியும்.

### உயரமான மரம்

கலிபோர்னியாவில் ஒரு பெரிய மரம் இருக்கிறது. இந்த மரம் 120 மீட்டர் உயரம் உடையது. இதன் சுற்றளவு 30 மீற்றராகும்.

### ஒரு தோடம்பழம் இரண்டரைக் கிலோ

உலகிலேயே நிறை அதிகமுள்ள தோடம்பழம் ஒன்றை தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த விவசாயி ஒருவர் உற்பத்தி செய்து சாதனை புரிந்திருக்கிறார். இரண்டரைக் கிலோ நிறையுள்ள ஒரு பெரிய மனித தலை பருமன் உடைய இந்தத் தோடம்பழம் நெல்ஸ் புரூட் நகரில் நடைபெற்ற ஒரு பொருட்காட்சியில் இடம் பெற்றது.

### தீப்பெட்டியை கண்டுபிடித்தவர்

தீப்பெட்டியை முதன்முதலில் கண்டுபிடித்தவர் ஜோன் வாக்கர் என்பவர்தான். இவர் கண்டுபிடித்த தீக்குச்சி எதில் உரசினலும் தீப்பிடிக்கக் கூடியது. அந்தத் தன்மையை மாற்றி தீப்பெட்டியின் ஓரங்களில் உரசினல் மட்டும் தீப்பிடிக்கும் முறையைக் கண்டுபிடித்தவர்கள் வாஸ்விடினைச் சேர்ந்த ஜோன், காரல் லண்டஸ்ட்ராம் ஆகியோராகும். இவர்கள் 1852ல் இதனைக் கண்டுபிடித்தனர்.

## 48 நாட்களில் மற்றொரு குழந்தை

அமெரிக்காவில் ஒரு இரட்டை குழந்தை பிறப்பு விசித்திரமாக அமைந்தது. 1955 ல் ஒருபெண் இரட்டை குழந்தை பெற்றதில் முதல் குழந்தை டெலிகிப்க்கும், இரண்டாவது குழந்தை டெபிக்கும் இடையேயான நேரம் 48 நாட்கள்.

## மருத்துவம்

# புற்றுநோய்க்கு பிரதானமாக 3 வகையான சிகிச்சைமுறைகள் உண்டு

### புற்றுநோய் என்பது என்ன?

சாதாரணமாக சரீரத்தின் கலங்கல் ஒரு நோக்குடன் பிரிவடைகின்ற வளர்ச்சியை விருத்தி செய்தற்கும், சேதமடைந்த பகுதிகளைத் திருத்துவதற்கு, அல்லது தேய்ந்துபோன கலங்களை ஈடுசெய்வதற்கு பிரிவடைகின்றன, சில சமயங்களில் இவை இங்ஙனம் கட்டுபபடுதல் சீர் குலைந்து விடுகிறது. இக்கலங்கள் ஒரு காரணமுமின்றிப்பெருகுகின்றன. அடுத்துள்ள இழையங்களுக்கு இவைபரவுகின்றன. சரீரத்தின் ஏனைய பகுதிகளுக்கு இவை பரவுகின்றன. தூரவுள்ள உறுப்புக்களில் பிரிவடைந்து பெருகுகின்றன. இவ்வசாதாரண தன்மையே புற்றுநோய் எனப்படுகிறது.

### இந்நோய்க்குக் காரணம் என்ன?

சில கலங்கள் ஏன் சடுதியாக அசாதரணமாக இயங்குகின்றன எனவும் சரீரத்தைக் கட்டுப்படுத்தும் உறுப்புக்களின் இயக்கம் ஏன் சடுதியாகத் தவறுகின்றதெனவும் நாம் அறியோம். எனினும் இவற்றிற்கு ஒன்றிற்கு மேற்பட்ட காரணங்கள் இருக்க வேண்டும்.

சுவாசப்பையில் ஏற்படும் புற்றுநோய் எம்மாலேயே விளைவிக்கப்படுகிறதென்றும் சிகரெட் புகைக்காதவர்களிலும் பார்க்க சிகரட் புகைப்பவர்களிடையே இது அதிகமாக ஏற்படுகிறதெனவும் நாம் நிச்சயமாக அறிவோம். கைத்தொழில்களுக்கு உபயோகிக்கப்படும் இரசாயனப் பொருட்களினதும் மூலப் பொருட்களினதும் தாக்குதலுக்கு ஒருவர் தன்னை தொடர்ந்து ஆளாக்கின்புற்றுநோய் ஏற்படக்கூடிய தன்மை வலுவடைகிறதெனவும் சூரிய வெப்பத்தின் தாக்குதலுக்கு ஒருவர் தன்னை அளவுக்குமிஞ்சி ஆளாக்கின் புற்றுநோய் தோலில் ஏற்படக்கூடுமெனவும் நாம் அறிவோம். புகையும் அழுக்கும் சேர்ந்த நவீன கைத்தொழில் வாழ்க்கை இவ்வாபத்தை அதிகரிக்கிறது.

### புற்றுநோயின் விளைவுகளிலிருந்து எம்மை எங்ஙனம் நாம்காப்பாற்றிக் கொள்ளலாம்

புற்றுநோயெனக் கொள்வதற்கான குறிப்பாக அறிகுறிகள் ஒன்றும் இல்லை, எனினும் சில அறிகுறிகள் புற்றுநோயை எச்சரிக்கும் அறிகுறிகளாகவும் இருக்கலாம். சுலபமானதேகாரோக்கியத்திலிருந்து தொடர்ந்து வேறுபாடு காணப்படின் வைத்தியரிடம் சென்று பரிசோதித்துக் கொள்ளல் முக்கியமாகும். பெரும்பாலும் அவருடைய பரிசோதனையின் விளைவு அது புற்று புற்றுநோயின் அறிகுறிகள் அல்ல என்பதேயாகும். எமது மனச்சஞ்சலமும் நீக்கப்பட்டுவிடும். எனினும் அறிகுறி ஏதேனும் புற்றுநோயுடன் தொடர்பு பட்டதாயிருப்பின் நோய்க்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளித்தற்கு ஆரம்ப கட்டத்திலேயே கண்டுபிடித்தலான முக்கிய உதவியை நாம் புரிந்திருப்போமாவோம்,

### பின்பற்றக் கூடியதான வழிவகைகள் யாதேனும் உண்டா

ஆம், அவையும் மிகவும் சுலபமானவையே

1. வருடந்தோறும் மருத்துவ பரிசோதனையையும் பற்களின் பரிசோதனையையும் நடத்துவித்துக் கொள்ளவும்.
2. சாதாரண தேகாரோக்கிய நிலையிலிருந்து யாதேனும் மாற்றம் ஏற்படுகிறதாவென அவதானித்துக் கொள்ளவும்,
3. குணப்படாத யாதேனும் கட்டி அல்லது புண் பற்றிக் கவனம் எடுக்கவும்.
4. அளவுக்கு மிஞ்சிய சூரிய வெளிச்சத்திலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும்.
5. புகைக்க வேண்டாம்.
6. பெண்களுக்கு கருப்பைக் கழுத்துக்கு மருந்துப் பூச்சுப் பூசி ஒழுங்காகப் பரிசோதித்துக் கொள்ளவும். சைட்டோ பரிசோதனை அல்லது பூச்சுப் பரிசோதனை.
7. மார்பை மாதாந்தம் நீங்களே பரிசோதித்துக் கொள்ளவும்.

ஈற்றில் இந்நடவடிக்கைகளுள் தேகாரோக்யத்துக்கு மிக முக்கியமானது, சந்தேகம் ஏற்படும் நேரம் வைத்தியரிடம் செல்லவும்.

### புற்றுநோய்க்கு எங்ஙனம் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

புற்றுநோய்க்குப் பிரதானமாக மூன்று வகையான சிகிச்சை முறைகள் உண்டு. அவையாவன. சத்திர சிகிச்சை, இறேடியக் கதிர் சிகிச்சை, இரசாயனச்சிகிச்சை

சத்திரசிகிச்சை மூலம் அசாதரணகலங்களைநீக்கலாம். கதிர்கள் அல்லதுஇறேடிய உயிர்ப்புகோபாற்று இறேடியம்அல்லது பெற்றேன் பொறியிலிருந்து கதிர்களை உபயோகித்து இறேடியச் சிகிச்சை மூலம் சரீரத்திலுள்ள இக்கலங்களை அழிக்கலாம். இவை ஒரு புறமிருக்க அறுவை வைத்தியரும் இறேடியத் தீர்ப்பனவாளரும் மக்களுக்குப் புற்றுநோயை நாளாந்தம் மாற்றி வருகின்றனர்.

எனினும் கலங்கள் சரீரத்தில் ஆரம்பத்தில் தோற்றிய அதே பகுதியிலிருக்கும் பொழுதும் வேறு பகுதிகளுக்கும் பரவாத வரையுமே இம்முறைகள் பலனளிக்கும். இரசாயனத் தீப்ர்பனவுஎன்பது சில விசேட மருந்துப் பொருள்கள் மூலம் சிகிச்சை அளிப்பதாகும்.

புற்றுநோய் ஒரு நோயல்லாத பலவகைப்பட்ட நோய்களானதால் புற்றுநோய் மாற்றுதற்கான நுதன மருந்துப் பொருளும் இல்லை, நுதன சிகிச்சை முறையுமில்லை எனினும் புற்றுநோயை வலுவடையச் செய்யாது தடுத்து வைத்தற்கும் நோயாளர்படும் கஷ்டத்தைக் குறைத்தற்கும் அலலது இவ்விரண்டில் ஒன்றைச்செய்தற்கும்அனேக மருந்துப் பொருள்கள் உண்டு. சில வகையான புற்று நோய்களை மாற்றுதற்கே தற்போது மருந்துப்பொள்கள் உண்டு.

புற்றுநோயால் பீடிக்கப்பட்ட சிலருக்கு அறுவை மூலமும் வேறு சிலருக்கு இறேடியத்தீர்ப்பனவு மூலமும் வேறு சிலருக்கு இரசாயனத் தீர்ப்பனவு முறைகளில் இரண்டின் அல்லது மூன்றினதும் சேர்க்கையால் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். புற்றுநோயை மாற்றுவதில் இரசாயனத் தீர்ப்பனவு முறையின் பிரயோகம் மூலம் கூடியளவு வெற்றி காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இம்முறை பெருமளவு பலனை அளிக்கக் கூடும். உற்சாக மூட்டும் பெறுபேறுகளைக் கொடுத்து வரும் பாதிப்பின்மைக்கான தீர்ப்பனவு முறையும் எதிர்காலத்தில் பெருமளவு பலனை அளிக்கக் கூடும்.

### புற்றுநோயை முற்றுக ஒழிப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன?

புற்றுநோய் பாரதூரமானதும் மருத்துவத் துறையிலும் சமூகத்துறையிலும் பெரிய பிரச்னையாக இருப்பதும் பற்றி உலகத்தின் அரசாங்கங்களும் விஞ்ஞானிகளும் வைத்தியர்களும் நன்கு அறிந்திருப்பதுடன் அரசாங்க தனியார் துறை மூலவளங்கள் இந்நோய்க்கான காரணங்கள் அதன் தன்மை சிறந்த முறையான சிகிச்சை நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

இது அனைத்துலகப் பிரச்னையாகவும் அனைத்துலக ரீதியில் கையாளப்பட வேண்டுமெனவும் தற்போது கருதப்படுகிறது. சிறந்த முறையானதும் கூடிய விரைவிலும் பெறுபேறுகளை எய்தக் கூடிய திட்டமிடப்பட்ட முயற்சி எடுத்தற் பொருட்டு சகல நாடுகளையும் சேர்ந்த விஞ்ஞானிகளையும் வைத்தியர்களையும் பாமரர்களையும் ஒன்று சேர்த்தற்கே அனைத்துலக புற்றுநோய்த் தடுப்புச் சங்கம் தாபிக்கப்பட்டது.

**நன்றி:**
**இலங்கை புற்றுநோய்ச் சங்கம்.**

---

## நூலரங்கு

### சுவாமி இராமதாஸ் அருளுரைகள்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வெளியீடாக இந்நூல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கஞ்சன்காடு ஆனந்தாச்சிரமஸ்தாபகர் இராமதாசர் சுவாமி சிவானந்தர், பரமஹம்சர் போல சிறு கதைகள் மூலம் ஆத்மீகத்தை உலகுக்கு ஊட்டியவர்.

பம்பாயிலிருந்து வெளிவரும் 'பவான்ஸ் ஜேர்னல்' என்ற புகழ் பெற்ற மாதாந்த இதழில் வெளிவந்தவற்றைச் சுவைப்படத் தொகுத்துத் தந்தவர் திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை. மகாஜனக்கல்லூரியின் பண்பாட்டாளர்களை உருவாக்கியவர்களில் ஒருவர்.

57 தலைப்புகளில் உள்ள மொழி நடையும், கருத்துத் தொகுப்பும் ஆசிரியரின் சமயத் தொண்டுப்பணியைப் பளிச்சிடச் செய்கிறது.

### திருவாதவூரர் வரலாற்றுச் சுருக்கம்

இது தெல்லிப்பழை பாலர் ஞானோதய வெளியீடு, வினுவிடை உருவில் வாதவூரர் கதை நகர்த்தப்படுகின்றது. இடையிடையே சைவசமய விளக்கங்களும் விடையூடாகத் தரப்பட்டுள்ளது நல்ல உத்தியாகும். திருக்குறளின் சில அதிகாரங்களும் திருவங்கமாலையும் சேர்க்கப்பட்டுள்ளன. ஆக்கம் சி. கணேசலிங்கக் குருக்கள் மாணுக்கருக்கு உகந்தது.

### சைவ சமயப் பொது அறிவு

தெல்லிப்பழை பாலர் ஞானோதய வெளியீடு. நாவலரின் 'சைவ வினுவிடை'யைப் பின்பற்றி அமைந்துள்ளது. நான்காம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணுக்கருக்குப் பெரிதும் நலன் பயப்பது; பரீட்சைகளுக்கும் உதவும்.

காலத்திற்கேற்றதாக, எளிமையான முறையில், சிறுர்கள் மனதிற் பதியும் வகையில் பல சமய உண்மைகளையும் தொகுத்துத் தந்துள்ளார் சி. கணேசலிங்கக் குருக்கள்.

---

## துன்பம் அறியாத் துன்பம்

தலைவனின் வரவு காணுத்
தலைவியே வருத்தம் கொள்வாள்
தானதை அறிந்த தோழி
தலைவனைப் பழித்து ரைப்பாள்

தவறிது என்று கூறித்
தானங்கு எடுத்து ரைப்பாள்
கடமையின் காரணத் தாலே
கண்டிட மறந்தா னென்று

உறுதுயர் அறிந்தா னென்றுல்
ஓடியே வருவான் என்தன்
உள்ளமே கொள்ளை கொண்டான்
உணர்த்தியே தலைவி நின்றுள்

பாம்பினின் வாயில் யானை
பட்டுமே அவதி கொள்ளப்
பார்த்துமே பெண்யா னையேங்கிப்
பதறியே முழக்கம் செய்ய

அவ்வொலி மலையில் பட்டு
ஆர்த்துமே எதிரொ லிப்ப
ஆண்தனின் துன்பம் அந்தப்
பெண்ணது அறியா போலும்

தலைவியின் துன்பம் தன்னைத்
தலைவனே அறியா னென்று
தலைவியே கருதிக் கொள்ளும்
தன்மையில் ஒத்த தாகும்

பெண்ணின யானை போடும்
பேரொலி மலையில் பட்டு
அதிர்ந்துமே ஒலிப்பதைப் போலே
அவரிடம் சொல்வார் இல்லை

**- வ. யோகானந்தசிவம்**

---

# ஓர் 'நைன்ரி'யின் ஓலம்

யோவ் 'நைன்ரி' விலத்து விலத்து என்று கூவியபடி பத்து பதினைந்து இளம் வட்டங்கள் படுவேகமாகக் கண்டி தெரு வீதியால் பட்டணத்தை நோக்கி பறந்து கொண்டிருந்தார்கள்.

''நைன்ரி' யாக இருந்தாலும் மூன்று தலைமுறைகளைக் கண்ட நான் வாழ்ந்த வாழ்வு எங்கே இவர்கள் வாழும் வாழ்வு எங்கே என்று அங்கலாய்த்தேன்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் இறுதியில் குண்டு போட்டு பூண்டோடு அழிக்கப்பட்ட ஜேர்மனி, 20 ஆண்டு காலத்தில் வளர்ச்சியின் உச்சக் கட்டத்தை அடையவில்லையா? ஐரோப்பா முழுவதும், சிதறி, பதறிஓடி துடிதுடித்துச்செத்து மடிந்த லட்சோபலட்ச இஸ்ரேலியர்கள் புதியதொரு நாட்டை உருவாக்கித் தமது பாரம்பரியத்தை கட்டிக் காத்து தமக்கென தனியான முத்திரை பதிக்கவில்லையா?

வீட்டுக்கு வீடு மனைவி - புருஷன் தாய்-பிள்ளைகள், தம்பி-தங்கைகள் பிரிவு குடும்பங்களின் அடி நாதத்தையே ஆட்டம் காண வைத்துவிட்டது. வீட்டில் பணம் குவிந்து கிடந்தாலும் மனங்களில் வெறும் ஏக்கங்கள்தான் நிறைந்து கிடந்தன. இத்தகைய ஏக்கங்களைப் போக்க குடும்பம், குடும்பமாகவே வெளிநாட்டுப்பயணங்கள் திரை மறைவில் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன.

கடந்த நாற்பது ஆண்டுகால போராட்டங்களில் நாம் இழந்த இழப்புக்களுக்கு ஈடு இதுதானு? என்று கவலைப்பட்டேன்.

நாம் பிறந்த மண்ணுக்காக மடிந்த மைந்தர்கள் எத்தனை ஆயிரம்? இழந்த சொத்துக்கள் எத்தனை கோடி? எந்த மண்ணுக்காக மனித அடிப்படை உரிமைகள் அனைத்தையும் இழந்து பல துன்பங்களை எதிர்நோக்கிய நாம் காலம் கனிந்து வரும்போது மனம் கலங்கலாமோ?

ஈழத்தில் இரண்டாம் தரப் பிரஜைகளாக ஒருபோதும் வாழமாட்டோம் என்று உயிர் கொடுத்துப் போராடிவிட்டு வெளிநாடுகளில் போய் எத்தனையாம் தரப்பிரஜையாக வாழப் போகிறுர்கள் என்று அலுத்துக் கொண்டேன்.

கடந்த காலங்களில் நாம் இழந்த மனித அடிப்படை உரிமைகள் எத்தனை? எத்தனை? தெய்வாதீனமாக எமது உயிர் ஊசலாடிக்கொண்டிருப்பதைத்தவிர அனைத்து உரிமைகளையும் இழந்து தவித்த எமக்கு எப்போது விடிவுகாலம் பிறக்கும் என்று ஏங்குவது நியாயம்தானே?

நாமும் எமது நாட்டை கட்டி எழுப்பலாம். எமது வீடுகளில் நிம்மதியை நிலை நாட்டலாம். அதற்கான விழிப்புணர்ச்சி மக்கள் மத்தியில் ஏற்படவேண்டும் என்ற புதிய உற்சாகத்துடன் சாய்ந்து கிடந்த சாய்மான கதிரையிலிருந்து நான் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

அகில உலகத்தின் மையமாகத் திகழும் ஐ. நா... சபை ஒவ்வொரு ஆண்டையும் மனித சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சனைகளுக்குத்

**-மயூரன்-**

(9-ம் பக்கம் பார்க்க)

## மங்கையர் மஞ்சரி

# சிக்கனமான காஸ் குக்கர் சில தகவல்கள்

நமது பிரதேசத்தின் இன்றைய சூழ்நிலையில் மின் தடை, விறகுத் தட்டுப்பாடு, எரிபொருட் பற்றுக்குறை போன்ற பல்வேறு பிரச்னைகளிலிருந்தும் நமது இல்லத்தரசிகளுக்குக் கைகொடுப்பது 'காஸ் குக்கர்' (Gas Cooker) எனப்படும் வாயு அடுப்பாகும். நம்மவரிடையே வாயு அடுப்பின் பயன்பாடு அதிகரித்துள்ள இவ்வேளையிலே இவ்வடுப்பு தொடர்பான அனுகூல பிரதிகூலங்கள், பாவனையிலுள்ள சிக்கல்கள் போன்றவற்றை நாம் அறிந்துகொள்ளவேண்டியது இன்றியமையாததாகும்.

பெரும்பாலான வாயு அடுப்புகளிலே எரிபொருளாக L. P. Gas [Liguid Petrolium gas] எனப்படும் திரவ நிலைப் பெற்றோலிய வாயு பயன்படுத்தப்படுகிறது. அடிக்கடி வாயுக் கொள் கலன்களை [Gas Cylinders] குறிப்பிட்ட நிலையங்களிற்குக் கொண்டுசென்று நிரப்புவதன்மூலம் எரிபொருட் தேவையைப் பூர்த்தி செய்யலாம்.

வாயு அடுப்புகளிலே எரிபொருள் பூரண தகனத்துக்குள்ளாகிறது. அதாவது மற்றைய அடுப்புக்கள் போல கரி, சாம்பல் என்பன எஞ்சுவதில்லை. எரிபொருள் முழுவதுமே எரிதலுக்கும் வெப்பமாக்கலுக்கும் பயன்படுத்தப்படுகிறது. இதனுற் கூடியளவு எரிபொருட் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முடிகிறது.

நவநாகரீகத்தை நாடும் இன்றைய இல்லத்தரிசிகள் இவ்வடுப்பை விரும்புவதற்குக் காரணம் இன்றைய நாகரீகத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள புகை போக்கிசளற்ற நவீன சமையலறைகளில் [Modern-kitchens] உபயோகிப்பதற்கு இவ்வடுப்பு உகந்ததாகும். பாத்திரங்களிற் கூடக் கரி படிவதில்லை.

அனுகூலங்களையும் சிறப்புக்களையுமுடைய இவ்வடுப்பிற் பிரதிகூலங்களும் இருக்கத்தான் செய்கின்றன. வறுமைக் கோட்டிற்குக்கீழ் வசிப்போருக்கு இவ் அடுப்புப் பாவனை இயலாத ஒன்று. அவர்களது வருமானப் பற்றுக்குறையே இதற்கான காரணமாகும். இவ்வடுப்பின் உபயோகத்தில் எண்ணற்ற விபத்துக்களும் உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன. கொலையாளிகள் பலர் திட்டமிட்ட பல வேலைகளைச் செய்வதற்கு வாயு அடுப்பினையே பயன்படுத்தியுள்ளனர் என்பது பலரும் அறியாத விடயம். இந்தியாவிலே பெண்மணியொருவர் அவரது சமையலறையிலேயே எரியூட்டிக் கொல்லப்பட்டார். இதற்குக் காரணம் கொலையாளிகள் அவரது வீட்டு வேலைக்காரன்மூலம் முதல்நாள் இரவு சமையலறையிலுள்ள வாயு அடுப்பைத் திறக்கச் செய்தமையே ஆகும் என்று கூறப்படுகிறது.

சில விதிமுறைகளைக் கையாள்வதன் மூலமே வாயு அடுப்பு தொடர்பான விபத்துக்களிலிருந்து தப்ப முடியும். காலையில் காஸ் குக்கரை உபயோகிப்பதற்கு முன் சமையலறையின் கதவுகள் யன்னல்கள் என்பன திறந்துவிடப்பட்டு போதிய காற்றோட்டம்ஏற்பட்டதன் பின்பே உபயோகிக்கவேண்டும். ஏற்கனவே வாயுக் கொள்கலன் திறந்து விடப்பட்டிருந்தால் அதைப் பூட்டிச் சிறிது நேரம் விட்ட பின்பே போதிய காற்றோட்டத்தில் உபயோகிக்க வேண்டும். இவ்வாறு செய்யாவிடின் வாயுக்கசிவுகள் இருந்தால் சமையலறை முழுவதுமே எரியூட்டப்படும் அபாயமுண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இல்லத்தரிசிகளும், சமையல் விற்பன்னரும் வாயு அடுப்பினை உரிய முறையில் உபயோகித்து சிக்கனமாக அவ்வடுப்பிலிருந்து நிறைந்த பயனைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ''வாயு அடுப்பும் மின்சாரத்தைப் போலவே நன்மை செய்யும், ஆனுற் தவறிழைத்தாற் தீங்கு செய்யும்'' என்பதனைக் கருத்திற் கொண்டு செயற்பட்டால் அதன் பயனை முழுமையாக அனுபவிக்க முடியும்.

- அருணா

சரவெட்டி.

---

## விஞ்ஞான விந்தைகள்

### விண்வெளியில் உயிரின ஆராய்ச்சி

விண்வெளியில் மற்றெரு உயிரின ஆராய்ச்சியை சோவியத் யூனியன் நடத்தியுள்ளது. விண்வெளி உயிரின ஆராய்ச்சிக்கூடமான ''காஸ்மால்-1514'', கில பிராணிகளுடன் விண்வெளியிற் சுற்ற விடப்பட்டது. விண்வெளியில் ஐந்து நாட்கள் சுற்றியபின் அது பூமிக்குத் திரும்ப வந்தது.

ஆளில்லாத செயற்கைக் கோள்களில் விரிவான உயிரியல் ஆராய்ச்சிகள் நடப்பதாக எவ்கெனி இலியின் என்ற விஞ்ஞான நிபுணர் கூறினுர். ''காஸ்மாஸ்-1514'' செயற்கைக் கோளானது. 6-வது உயிரியல் ஆராய்ச்சி நிலையம் ஆகும். ஆனுல் அமெரிக்கா இரண்டு உயிரியல் ஆராய்ச்சி நிலையங்களை மட்டுமே செலுத்தியுள்ளது. வேறுவிதமாகச் சேகரிக்க முடியாத தகவல்களை இந்த உரியல் ஆராய்ச்சிச் செயர்க்கைக் கோள்கள் சேகரிக்கின்றது.

இதற்கு முன் செலுத்தப்பட்ட உயிரியல் ஆராய்ச்சிச் செயற்கைக் கோள்கள், உயிரினங்களின்வளர்ச்சிமீது எடை

[10ம் பக்கம் பார்க்க]

---

# வாழ்வு என்பது மறைந்துபோவது!!

# வாழ்ந்தவிதம்தான் நிறைந்துவாழ்வது!!

திருமணங்கள் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்படுவதாக பண்டைய காலம்முதல் இன்றுவரை அனைவரதும் நம்பிக்கை. இதனையே பெரியோர்களும் அழுத்தமாகக் கூறுகிறுர்கள். இன்றைய பெண்களுக்கோ எத்தனை வசதிகள் வாய்ப்புக்கள், வளமான வாழ்க்கை எல்லாம் கிடைத்தாலும் திருமண வாழ்வின் பின்னரேதான் பிரச்சினைகள். பாதிக்கப்படும் பெண்கள் அது நரகத்தில் நிச்சயிக்கப்படுவதாக புலம்புவதில் ஆச்சரியமில்லை. இதனையே இன்றைய நாவலாசிரியர்களும் கருப்பொருளாக ஆய்வு செய்கிறுர்கள்.

இன்றைக்கு நடைபெறும் திருமணங்கள் பெண்களைப் பெற்றவர்களால் நிச்சயிக்கப்பட்டு ஒவ்வொரு பெண்ணுலும் காப்பாற்றப்படுகிறது. பெண்களே பிரச்சனைகளைப் பெரும்பாலும் பிரசவிக்கின்றனர் என்று ஊரும் உலகமும் சொன்ணுலும் அதற்கு காரணமாக இருப்பவர்கள் ஆண்கள்தான். வாழ்வில் பிரச்சனைகள் வந்து போகலாமேதவிர அதுவே சொந்தக்காரர்களைப் போல வாழ்வே பிரச்சனையாக மாற எந்தப் பெண்ணும் முனையக் கூடாது. இதனுல்தான் வாழ்வு என்பது மறைந்து போவது. வாழ்ந்தவிதம்தான் நிறைந்து வாழ்வதென கூறுகிறுர்கள். பெண்கள் வேலைக்குப்போவதால் பிரச்சனை, மாமியார் மருமகள் பிரச்சனை, மாமனுர் பிரச்சனை, சீதனப் பிரச்சனைகள், பால் உணர்ச்சிப் பிரச்சனைகள், காதல் மணப் பிரச்சனை, பெண்கள் சமத்துவமாக பழகுவதால் பிரச்சனை, இப்படியாக ஒவ்வொரு பெண்ணும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்துத்தான் வாழவேண்டியுள்ளது.

பிரச்சனை என்பது வாழ்வில் இயல்பாக வரக்கூடியதுதான். பிரச்சனையென்பது கணவன் மனைவி ஊடலைப்போன்றது. பிரச்சனையே இல்லாத வாழ்வு கூட ஒரு பிரச்சனையாகிவிடும் என்பது அனுபவ உண்மை. பிரச்சனையே இல்லாத வாழ்வு இனிக்காது என்பது தத்துவம். அப்படி ஒரு வாழ்வும் கிடையாது.

முன்பு இடியிடித்தது; இப்போது மழை பொழிகிறது என்று சோக்கிரட்டீஸ் தன் நண்பனிடம் தன்மனைவியைப் பற்றி கூறியது மனைவியின் திட்டுதலையும், வெந்நீர் கொட்டுதலையும் வேடிக்கையாகக் கூறினுர். இவையெல்லாம் எமக்குப் படிப்பினையாக கருதுங்கள். பிரச்சனைத்திருடர்கள் சமுகத்தில் இருக்கத்தான் செய்வார்கள். அதனை மறந்து

(10-ம் பக்கம் பார்க்க)

அனுஷியா

---

## மாணவர் மன்றம்

# பொறுமையால் வந்த விழைவு

பிரபு, கணேஷ் என்னும் இருவரும் ஒரே வகுப்பு மாணவர்கள். அதில் கணேஷ் மிகவும் படிப்பில் கெட்டிக்காரன். அதே போல் பிரபுவும் படிப்பில் கெட்டிக்காரன் தான். ஆனுல் கணேஷ் பிரபுவைவிட நன்ருய்படிப்பான். எல்லா தேர்வுகளிலும்சித்தியடைந்து அதிக புள்ளிகளை எடுத்து முதலாம் பிள்ளையாக வருவான். ஆனுல் பிரபுவோ அதற்கு அடுத்த படியாக இரண்டாம், மூன்றும் பிள்ளையாகத்தான் வருவான். இதனுல் பிரபு கணேஷ் மீது பொருமை கொண்டவனுக விளங்கினுன். கணேஷ் தனக்கு தெரியாதவற்றை பிரபுவிடம் கேட்டால் பிழையாகச் சொல்லிக்கொடுப்பான். அல்லது தெரியாதுஎன்றுசொல்லுவான். ஆனுல் கணேஷ் தனக்கு தெரிந்தவற்றை பிரபுவுக்கும் சொல்லிக்கொடுத்து அவனை நன்ருக படிக்க வைப்பான். அன்று திங்கட்கிழமை முதலாம் பாடம் கணிதம். வகுப்புக்குள் நுழைந்த ஆசிரியர் 'உங்களுக்கு படித்த பாடங்கள் அனைத்திலும் வருகிற திங்கட்கிழமை பரீட்சை வைக்கப்போகிறேன்' என்ருர். அவர் அதைக் கூறிய அடுத்த கணமே பிரபு மனதுக்குள் திட்டம் தீட்டினுன். இவனை இந்தப் பரீட்சையில் பங்கு பற்றுமல் செய்து தான் முதலாம் இடத்தை தட்டவேண்டும் என்று. அதன்படியே அடுத்த நாள் கணேஷ் சைக்கிளில் எங்கோ சென்று கொண்டிருந்தபோது மறைந்திருந்து ஒரு பெரிய கல்லால் எறிந்தான். அது கணேஷின் காலில் பட்டு பெரிய காயத்தைஏற்படுத்திவிட்டது. இவன் இதனுல் நடக்க இயலாமற் போய் விட்டான். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான். ஆனுல் கணேஷ் தனக்கு கல் எறிந்தது பிரபு தான் என்று தெரிந்தும் சொல்லாதிருந்தான். ஆனுல்அனைத்து மாணவர்களும் கணேசைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு சென்ருர்கள். பிரபுவை கூப்பிட்டபோது வரமாட்டேன் என்று மறுத்து விட்டான். அப்போது அனைத்து மாணவர்களுக்கும் தெரிந்து விட்டது, இது பிரபுவின் வேலை தான் என்று. ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த கணேஷ் பரீட்சை நடப்பதற்கு முன்பேகுணமாகி விட்டான். பரீட்சை நாளை மறுதினம் நடக்கப்போகிறது. பாடம் ஆயத்தம் செய்யவும் ஒரு நாள் தான் இருக்கிறது என்று கவலைப்பட்டான். எனினும் பொறுமையுடன் அந்த ஒரு நாளிலேயே அனைத்துக் கணக்கையும் மீண்டும் செய்து பார்த்து ஒருமன ஆறுதலுடன் பாடசாலைக்குச் சென்ருன். பாடசாலைக்கு சென்றதும் பிரபு லொறியுடன் மோதுண்டு கால் முறிந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான் என்று மாணவர்கள் கூறினதும் கணேஷ் பதறிப்போனுன். உடனே ஆஸ்பத்திரிக்கு சென்று அவனைப்பார்வையிட்டான். அத்துடன் இன்று பரீட்சையை வைக்க வேண்டாம் என்றும் ஆசிரியரிடம் கூறினுன். அவன் கூறியதால் ஆசிரியரும் பரீட்சையை நிறுத்தி வைத்தார். அப்போது மற்ற மாணவர்கள் கணேசைப்பார்த்து உன்னைக் கல்லால் எறிந்து பரீட்சையை எழுதாமல் வைக்கப்பார்த்தவன் மீது உனக்கு ஏன் இவ்வளவு அக்கறை என்று கேட்டார்கள். அதற்கு கணேஷ் எம்மை வெறுப்பவர்களை அன்போடு ஆதரிக்கவேண்டும் என்று கூறினுன், இதை பிரபுவைபார்வையிடச் சென்ற மாணவர்கள் கூறவே அவன் கணேஷிடம் மன்னிப்பு கேட்டான். தான் செய்த தவறை உணர்ந்தான். ஆதனுல் தனக்கு வந்ததை இட்டும் மனம் வருந்தினுன். அன்றிலிருந்து பிரபு, கணேசுடன் ஒற்றுமையாய் வாழ்ந்தான்,

படிப்பில் போட்டி இருக்கத்தான் வேண்டும். ஆனுல் பொருமை இருக்கக் கூடாது. பொருமை தந்த விளைவைப் பார்த்தீர்களா?

கி. செல்மர் எமில்,
ஆண்டு 10,
புனிதஅந்தோனியார்கல்லூரி,
ஊர்காவற்றுறை.

---

## உங்களுக்குத் தெரியுமா?

### இலங்கையின் கைத்தொழிற்சாலைகள்

1. இல்மனைற் சுத்திகரிப்பு — புல்மோட்டை
2. சீனித் தொழிற்சாலை — கந்தளாய்
3. ஒட்டுப்பலகைத் தொழிற்சாலை — ஜின்தோட்டை.
4. டயர், ரியூப் தொழிற்சாலை — களனி
5. பீங்கான் தொழிற்சாலை — நீர்கொழும்பு
6. கட்டிப்பாற் தொழிற்சாலை — பொலநறுவை
7. புடவை ஆலைகள் — வியாங்கொடை, துல்கிரியா, பூகொடை
8. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் — கபுகஸ்கந்த
9. உருக்கு, இரும்புத் தொழிற்சாலை — ஒறுவலை
10. மண்வெட்டித் தொழிற்சாலை — யக்கல

சார்ள்ஸ் வதனேஜன்
அச்சுவேலி மகாவித்தியாலம்

## சரிநிகை

பொழுது பொல பொலவென விடிகிறது.

சந்திரன் இரவு முழுவதும் கண்மூடவில்லை. அன்று அவன் மனைவி வெளிநாட்டு ஏஜென்சி ஒன்றிற்கு இன்ரவியுவிற்குப் போகப் போகிறாள். அவனை யாரும் கலந்தாலோசிக்க வில்லை. ''அப்பிளிகேசன் போட்டன் இன்ரவியூவிற்குக் கோல் வந்திருக்கு'' என்று மட்டும் சொன்னாள்.

அவளை இன்ரவியுவிற்குப் போகவேண்டாம் என்று தடுக்கலாமே.

இவனால் முடியாது. சுபாவம் அப்படி.

சுமதி பிடிவாதக்காரி. அவள் வளர்ந்த விதம் அப்படி. தாயின் செல்லம்,

சுமதி சொந்த மாமியின் மகள் தான். தகப்பனின் தங்கையின் மகள்.

தகப்பன்......

அந்த ஆறடி மனிதனை நினைக்கவே உடம்பு நடுங்கும். ''டாய்! இஞ்சவா'' என்று அற்ப குற்றங்களுக்குப் புளியந்தடியினால் விளாசு விளாசென்று விளாசிவிடுவார். சாப்பிட்டதும் திண்ணையில உட்கார்ந்து சுருட்டுப் புகைத்துக் கொண்டு ''டாய் இஞ்சவா. முதுகைச் சொறி என்பார். இது அநேக நாட்களில் நடக்கும் சம்பவம்.

''அவன்சாப்பிட்டிட்டு வரட்டுமே'' இது அம்மாவின் குரல். உரிமையோடு ஒலிக்கும் குரலல்ல. ஒரு விண்ணப்பம். ''துரை பேந்து சாப்பிடட்டும்.''

சிறுவயதில் அவனுக்கு அவரின் வழுவழுவென வியர்வை கசியும் முதுகைத்தொட அருவருக்கும். கற்றாளை நெடியும், அத்தோடு கள்ளும் சாராயமும் சேர்ந்தால் வீசும் கதம்ப மணத்தை எப்படி விபரிப்பது.

''நடுமுதுகில, கொஞ்சம் மேல மேல சனியனே பிராக்குப் பார்த்துக்கொண்டு பருக்குத்திறியே!'' லொட், தலையில் குட்டு விழும்.

தாய் அடங்கி அடங்கி வாழ்ந்தே பழகிவிட்டவாறு மகனும் அதட்டல் மிரட்டல்களில் வளர்ந்து பயந்த சுபாவமுள்ளவனாகிவிட்டான். மாமியும் கிட்டத்தட்ட தகப்பனின் தோற்றமுள்ளவள். சிறுவயதில் அவளிடமும் இவனுக்கு பயம் இப்போ பயமா? மரியாதையா?

இன்னும் இதுவரை ஆராய வில்லை.

வீட்டின் அதிகாரம் மாமி கையில், இவனும் தன் அதிகாரத்தை நிலைநாட்ட விரும்பினாற்தானே பிரச்சனை.

சுமதிக்கு ஏழு எட்டு வயதில் தாயும் அவளும் யாழ்ப்பாணம் வந்துவிட்டார்கள். மாமி பின்பு கொழும்பிற்கு போக வில்லை. புருஷனுடன் கோபம். அவரும் வருவதில்லை. அப்பாடா என்று நிம்மதியாகக் கொழும்பிலிருக்கிறார். என்று கேள்வி.

சந்திரன் ஸ்பெசல் ட்ரைனிங்குக்குப் போய் ஆசிரியராக வேலை பார்க்கிறான். கலியாணங்கள் பேசி வந்தபோது 'தங்கச்சிக்குப் பிறகு பார்ப்பம்' என்று தட்டிக் கழித்து வந்தான்.


சந்திரன் சிகரட் குடிப்பதில்லை. டெனிம் சாற்சட்டை போடுவதில்லை. சுருண்ட முடியை கன்ன வகிடெடுத்து வாரிவிடுவான். இதுவும் சுமதிக்கு பிடிக்காதாம்.

சந்திரனின் தங்கை இந்த மட்டில் அண்ணனை அவள் விரும்பவில்லை யென்பதில் மகிழ்ச்சியடைந்திருக்கிறாள்.

தெய்வ நியதி இருக்கிறதே, அதை யாரால் மாற்றமுடியும் சந்திரன் சுமதியைமணந்தான்.

சந்திரனை விட்டால் வழியில்லையென்றதால் அண்ணனை மன்றாடிச் சம்மதம் வாங்கி விட்டாள். ''என்ர பிள்ளையிட குணத்திற்குச் சுமதி ஒத்து வராது'' என்ற தாயின் மிகவும் பலவீனமான எதிர்ப்பை தகப்பன் பொருட்படுத்தவில்லை. இரண்டு உதைகளைப் பரிசாகப் பெற்றாள். மகன் எதிர்க்கவா போகிறான்!

சந்திரனுக்கு ஆசைகள் தேவைகள் மிகக்குறைவு.




சுமதியிடமும் அவன் பிரமாதமாக ஒன்றையும் எதிர்பார்க்க வில்லை. ஆதலால் மணவாழ்க்கையில் அதிக வித்தியாசத்தை உணரவில்லை. ஒன்றைத் தவிர முன் தாய் வீட்டிலிருந்தான் இப்போ மாமியார் வீட்டில், அவ்வளவுதான்.

சுமதிக்கு நிறையச் சிநேகிதிகள் வெளிநாடுகளுக்குப் போய் வந்தவர்கள்; அண்ணன் தம்பி வெளிநாடுகளில் இருப்பவர்கள்; புருஷன் வெளிநாட்டில் இப்படி அநேகர். எல்லா வீடுகளிலும் ரீ. வி. வீடியோ. ப்றிட்ஜ், கோப்பி மெசின் இப்படி இப்படிப் பல. சுமதி வீட்டில் பன்னிரண்டு இஞ் கறுப்பும் வெள்ளையும் ரீ. வி. மட்டும்தான். ''உதுல எப்படியப்பா படம் பார்க்கிறீர்'' என்று சிநேகிதிகள் கேட்கும் போது வெட்கத்தில் குன்றி விடுவாள். இச்சிநேகிதிகள் வீடுகளில் அடிச்கடி விருந்துகள் நடைபெறும். சந்திரன் புகைப்பதில்லைகுடிப்பதுமில்லை. வெறும் கொக்கா கோலாவுடன் சரி. சில நாட்களில் விருந்து முடிந்து வீடு வந்தபின்

''அவையள் ஆசையாக ஒரு சிகரெட், ஒரு சின்ன ட்றிங்க் ஒவ்வர் பண்ணினால் ஒரு மரியாதைக்காக குடித்தால் என்ன உங்களைச் சபையிலிருந்து தள்ளிப் போடுவினமே, நீங்கள் பேசாமல் இருந்தால் மற்றவையள் எப்படி என்ஜொய் பண்ணுவினம். சுமதியின் புருஷன் வந்தால்பார்ட்டி டல் என்று கதைக்கினம், சியாமளா என்ன சொன்னாள் நல்ல சாமியாரைத்தான் நான் கலியாணம் செய்திருக்கிறேனாம்.''

ஒரு சமயம் இவளின் சினேகிதி வீடியோவில் 'காந்தி' படம் போடுகிறோம், வாருங்கள் என்று அழைத்திருந்தார்கள். படம்தொடங்கி நல்ல சுவையானகட்டம் நடந்து கொண்டிருக்கையில் சந்திரன் ஒரு சின்னட்றிங்க் எடுமன்'' என்று கிளாசை நீட்டினார்கள்.

'ஒரு உத்தமரின் வாழ்க்கையை காண்பிக்கையில் ட்றிங்க் குடிக்கவா வேண்டும். மேலை நாடுகளிலேயே இக்காட்சி நடைபெறும் போது தியேட்டர்களில் மதுபானம் அருந்த வில்லையென்று கேள்வி இங்கோ!...''

சந்திரன் பேசாமல் எழுந்து வந்து விட்டான். சிநேகிதிகள் போட்ட தூபமோ, அல்லது ஆடம்பரப்பொருட்கள் வாங்க வேண்மென்ற ஆசையோ. சுமதியை வெளிநாட்டிற்குப் போகத்தூண்டியது. முதலில் சந்திரன் அதை பெரிதாக எடுக்கவில்லை. இன்டர்வியூவிற்கு அழைப்பு வந்த பின்பே இது நிஷம்தான் என உணர்ந்தான். சும்மா ஆட்சேபம் தெரிவித்தபோது ''உங்கடை பிச்சைச் சம்பளத்தில் என்னத்தை வாங்குகிறது. ஒரு சீலை வாங்கவேண்டுமென்றால் நாலு தடவை யோசிக்க வேண்டியிருக்கு. ஒவ்வொரு வீட்டிலும் என்னென்ன சாமான்கள் இருக்கின்றன. என்ர சிநேகிதிகள் வடப் போறன் எண்டு சொன்னால் எனக்கு வெட்கமாக இருக்கு. நீங்களெண்டாலும் வெளி நாட்டுக்குப் போவியள் எண்டு பார்த்தன். போறதாய்க் காணவில்லை. நான் ஒரு வருசமோ இரண்டு வருசமோ போய் உழைத்து எனக்கு விரும்பினதை வாங்கப்போறன். ஆரும் என்னைத் தடுக்காதையுங்கோ''

மாமியைப் பார்த்தான். அவளாவது தடுப்பாள் என்று. அவள் நீங்களாச்சு உங்கள் மனைவியாச்சு, எனக்கொன்றும் தெரியாது என்ற விதத்தில் எழுந்து உள்ளே போய் விட்டாள்.

இரவு பஸ்ஸிற்குப் போக சுமதி தயாராகிவிட்டாள். சந்திரன் முன் அறையில் அன்றைய தினசரியைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

''நீங்கள் இன்னும் வெளிக்கிடயில்லை, லீவு எடுத்தனீங்களே?''

''நாங்கள் எங்க போறம்''

''காலமை சொன்னனான் தானே இன்டைக்கு இன்டர்வியூக்குப் போறன் எண்டு''

அப்ப நீங்கள் போறது தானே, நான் எதுக்கு.''

''எனக்குத் தனிய போகத் தெரியாதே. கொழும்புக்குப் போக விடிஞ்சு போகும். லேயாட்ஸ் ப்ரேட்வே யில் இறங்கி, கிறீன் லேனுக்குப் போகத் தெரியும்.''

''பிள்ளை கார் வந்திட்டுது அவர் வரயில்லையே.''– மாமியின் குரல்.

வரயில்லையாம், அம்மா போட்டுவாறன்; ரஞ்சியும் புருஷனும் பஸ் ஸ்ராண்டுக்கு வருகினம், போட்டுவாறன்.''

''ஒருத்தரும் ஒரு இடமும் போகயில்லை, சுமதி பெட்டியை வை, நீ கொழும்பிற்குப் போறதில்லை.''

''காது கேக்குதே பெட்டியை வைச்சிட்டு உள்ள போ. வையடி பெட்டியை'' பளார் பளார், சூட்கேசைப் பறித்தெறிகிறான் சந்திரன். துணி பவுடர் எல்லாம் சிதறுண்டு கொட்டுகின்றன.

''அவளை அடிக்கிறவரைக்கும் வந்தாச்சோ நான் ஒரு நாள் அவளைத்தொட்டிருப்பனே''

''மாமியெண்டு மரியாதையாகச் சொல்லுறன் வாயை மூடிக்கொண்டு பேசாமலிருங்கோ, இது எனக்கும் சுமதிக்கும் உள்ள விஷயம்''

''அடிச்சுக் கொல்ல பாத்துக்கொண்டிருப்பனே.''

''மாமியெண்டு பார்க்க மாட்டன்,, தாய்க்கும் மகளுக்கும் திமிர். மகளை வளர்த்த லட்சணம் தான் சரியாக வாழ்ந்தாத்தானே மகளுக்கு புத்தி சொல்லலாம்',''

சுமதி உதட்டில் பல்லுக் குத்தி இரத்தம் வடிய பெண் சிங்கம் போல சிலுப்பிக் கொண்டு நிற்க, புறங்கையால் பளார் என்று இன்னுமொரு அறை போட்டு, ''சீலையை மாத்திக் கொண்டு பெட்டியை அடுக்கி உள்ள கொண்டுபோய் வை. இந்த வீட்டில என்னைக் கேட்காது எதுவும்நடக்கட்டும் பாப்பம். அண்டைக்கு கொலை விழும். ஷொப்பிங், படம் பார்க்க, வீடியோ பார்க்க சினேகிதி வீட்டுக்கெண்டு திரியட்டும் பாப்பம் என்ன செய்யுறனெண்டு,''

இந்த அமளியில் கார்க் காரன் பறந்து விட்டான்.

சந்திரன் தான் தான் எஜமான் என்று நிரூபித்து விட்டான். இரண்டு பெண்களும் அடங்கி விட்டனர்.

தான்கூட புருஷன் ஒருநாள் அடித்தற்காக பிரிந்து வந்தது பிழையோவென மாமி நினைக்கத் தொடங்கிவிட்டாள்.

'பிள்ளை இரவைக்குப் புட்டே?' - இது தாய்.

'அவரைக் கேட்டிட்டுச் செய்வம் அம்மா' -இது மகள்.

(யாவும் கற்பனை)

"தியாகராஜன்"

## திருட்டுப் பணம்

ஒருவன் தான் பெற்றுக் கொள்ளும் ஊதியத்திற்கு தகுந்தவேலை; தன் மெய் வருந்தி செய்தல்வேண்டும் அப்படியின்றி. வீண்காலம் கழித்து வேண்டாவெறுப்பாக வேலைசெய்து அவன் பெறும் ஊதியம் நிச்சயம் அவனுடைய உழைப்பின் பலனாகாது. அப் பணம் களவெடுத்த பணத்திற்கு சமனாகும்.

—காந்திஜி

## ஒரு நையின்ரி

(7ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு காணக்கூடிய விதமாக பிரகடணப்படுத்தி அதற்கான ஊக்குவிப்புக்களை வழங்குவது வழக்கம். அந்த வகையில் கடந்த காலங்களில் பெண்கள் ஆண்டு. இல்லிடமற்றோர்க்கு இல்லிடம் வழங்கும் ஆண்டு குழந்தைகள் ஆண்டு எனப் பிரகடனப்படுத்தி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்ததுண்டு. அவர்கள் பிரகடனப் படுத்திய ஒவ்வொரு ஆண்டிலும், எமது நாட்டில் குறிப்பாக எமது பிரதேசத்தில் ஐ. நா. சபையின் இலட்சியத்துக்கு மாறாக சாபக்கேடுகள் தான் நிகழ்ந்த வண்ணம் இருந்தன.

சகலருக்கும் வீட்டு வசதி செய்யும் ஆண்டு என்று பிரகடனப்படுத்திய ஆண்டில் தான் பல ஆயிரக்கணக்கான வீடுகள் குண்டு வீச்சு ஷெல் அடிகளினால் அழித்து ஒழிக்கப்பட்ட அட்டூழியங்களைக் கண்டோம். இவ்ஆண்டு சர்வதேச கல்வியாண்டாகப் பிரகடனப் படுத்தியுள்ளனர். நல்ல இலட்சியம்தான். எமது நாட்டை எமது பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் இளம் சந்ததியினரின் கல்வித்தரம் தாழ்வின் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள அவலத்தையே கடமை முடிந்து கல்வியையே மூலதனமாகக்கொண்டுவளர்ச்சிகண்ட எமது சமுதாயம் கற்ற கல்வியால் என்ன பயனைக்கண்டோம் என்று புழுங்கும் இடையிட்ட தலைமுறையினரையும் கல்வி கற்று எதனைக் காணப் போகின்றோம் என்று வெளி நாடுகளுக்கு லட்சோப லட்சங்களைச்செலவிட்டு தப்பியோடி விடவேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கும் இளம் தலைமுறையினரையும் கண்டு மனம் துடிக்கிறது.

இவையாவும் எமது சமுதாயத்தில் காணப்படும் நிதர்சனமான உண்மைகள்: ஆயினும் இத்தகைய போக்கினை கட்டுப் படுத்தி வரையறைவான நல் வாழ்வுக்கு வழிசமைக்கும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. கடந்தகால அனுபவங்களில் ஏற்பட்ட அவலங்களை மனதில் கொண்டு எதிர் கால ஆக்கங்களுக்கு வழி அமைக்க பழைய தலைமுறையினர் இளம் சந்ததியினர்க்கு நிச்சயம் துணைபுரியவேண்டும். என்ற வைராக்கியத்துடன் முதுமையை மறந்து, இளசுகளின் இதயத் துடிப்புடன் சாகுமுன் எதையாவது சாதித்துவிட்டு சாகவேண்டும் என்ற சபதத்துடன் வீடு நோக்கி வேகமாக சைக்கிளில் பறந்து கொண்டிருந்தேன்.

## பாடசாலைகளில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தக்கூடிய ஒரு செய்தியை வெளிக்கொண்டுவருதலாகும். இச்செயற்பாடு தரவுகளைத் தரப்படுத்தல் என அழைக்கப் படுகின்றது. சில வேளைகளில் எமக்கு ஒரு தரவு கட்டாய மாகத் தரப்படுத்தல்வேண் டுமா? என்ற கேள்வி எழ லாம். அதாவது ஒரு கிலோ கத்திரிக் காயின்விலை நான்கு ரூபாய்கள் என்பது ஒரு தரவு. ஆனால் ஐந்து கிலோ கத்திரிக் காயின் விலை என்ன? என்று கேட்கும்போது ஒரு கிலோ கத்திரிக்காயின் விலை நான்கு ரூபாய் என்று ஆரம்பிப்பது கருத்தற்றது, ஆனால், அத்தர வைப் பதனிட்டு, ஐந்தாற் பெருக்கி, இருபது ரூபாய்கள் என்று சொல்லும்போது. அதுவொரு கருத்துள்ள செய் தியாக மாறுகின்றதல்லவா]! வாழ்க்கையின் எல்லாத்துறை களிலும் இவ்வாறான பதனிடு தல்நடைபெறுகின்றது. ஆனால் நாம் இதைப் பிரித்துப் பார்ப் பது இல்லை.

இவ்வாறாக. மனிதனுடைய வேலைகளை இலகுவாக்கும் ஓர் இயந்திரத்துடன் எப்படிப் பழகுவது? எப்படிப் பேசுவது? என்பதைப் பற்றி மாணவர் களுக்குக் கற்பிப்பது அவசிய மாகும். இதனாலேதான் மேலைத் தேயங்களிலே பாலர் வகுப்புப் பிள்ளைகளையும், கம்பியூட்டர் களுடன் விளையாடுமாறு ஊக் குவிக்கின்றனர். எனவே, கம்பி யூட்டர்த்துறையைக் கம்பி யூட்டர் அறிமுகம் என்ற ஒரு பாடமாக எல்லா வகுப்புக் களிலும் தரத்திற்கேற்றவாறு கற்பித்தல் நமது இளஞ்சந் ததியினரைஇருபத்தியோராம் நூற்றாண்டிற்கு அழைத்துச் செல்ல உகந்த நடவடிக்கை யாக அமையும்.

## விஞ்ஞான விந்தை

(8ம் பக்கத் தொடர்ச்சி)

யில்லாத நிலைமையின் விளைவு கள் பற்றி மிகவும் சுவையான தகவல்களை எலிகள், மீன்கள், ஆமைகள் முதலிய பிராணி கள் மூலம் ஆராயப்பட்டன. எடையற்ற நிலையானது உயி ரினங்களின்மீது எவ்வித விளைவையும் ஏற்படுத்தவில்லை என்பது இந்தச் சோதனைகளி லிருந்து தெரிகிறது. இதை மட்டுமே ஒரு முக்கியமான விளைவாகக் கருதலாம்.

இந்த ஆராய்ச்சி நிலையத் தில் மிக நவீனமான விஞ் ஞான சாதனங்கள் பொருத் தப்பட்டிருந்தன. விண்வெளி பயணம் முழுவதிலும், இந்ப் பிராணிகள் எப்படி நடந்து கொள்கின்றன என்பதை கவனிக்க செயற்கைக் கோளில் பொருத்தப்பட்டிருந்த டெலி விஷன் சாதனம் உதவியது.

## வாழ்வு என்பது

(8ம் பக்கத் தொடர்ச்சி)

விடுங்கள். பிரச்சனை என்னும் கீறலை பெரிய பிளவாக்காதீர் கள். பிரச்சனைகளைப் பெரிதாக் குவதும் சிறிதாக்குவதும் எமது கையில்தான் இருக்கிறது.

உலகம் மாயை என் னும் எண்ணம் குடும்பத்தவ னுக்கு தேவையில்லை. உலகம் சுவையானது என்னும் எண் ணமே எல்லோருக்கும் தேவை. கல்லானாலும் கணவன் புல்லா னாலும் புருஷன் என்பது பழங் கதை. ஆணுக்குப் பெண் சமம் என்பதை உணர்ந்து பணி விடை செய்தால் பிரச்சனைகள் உருவாகாது. ஒவ்வொரு பெண்ணும் உங்களுக்காகவே உலகம் என்பதை மறந்து உல கில் உலகுக்காக வாழ பழகிக் கொள்ளவேண்டும். சிரித்த முகமே நிலையான சொத்தென் பதை உணரவேண்டும். மன் னிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்: அதுவே மன அமைதியின் மாமருந்து. வீண்கர்வத்தை விட்டுவிடுங்கள். ஆடம் பரத்தை விட்டுவிடுங்கள், எளி மையாக வாழுங்கள், நட்பை யும் பகைமையையும் இடை வெளிவிட்டுப்பார்க்காதீர்கள். பிறரைப் பாராட்டிப் பழகும் நீங்கள் பிறர் இகழ்ச்சியையும் ஏற்றுக்கொள்ளுங்கள், இன் பம் துன்பம் இரண்டிற்கும் அதிக இடைவெளியோ பகைப் பொருளோ இருப்பதாக கருதாதீர்கள். எதுவரினும் தாங்கும் இயம் பெறுங்கள். உள்ளதைக்கொண்டு திருப் திப் படுங்கள் இல்லாததற்கு ஏங்கவேண்டாம். பிரச்சனை உங்களை பெரிதும் அண்டாது. இன்பம் என்றும் வாழ்வில் இருந்து கொண்டே இருக்கும்.


# SPOKEN ENGLISH

## பேச்சு ஆங்கிலப் பயிற்சியில் நூற்றுக்கணக்கான மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்ற

# Bright Training Centre

## அடுத்த கல்வி முயற்சி

## கடைக்கணக்கு எழுதும் முறை (METHOD OF BOOK-KEEPING)

# தபால் மூலம் கல்வி

கடைக்கணக்கு முதல் கம்பனி கணக்குவரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்திலிருந்து கற்றுத் தரப்படும். இது ஆறுமாத கால டிப்ளோமா பயிற்சியாகும்.

இன்று நாட்டில் கணக்குப் பதிவாளர் (Book-keeper) கணக்கு லிகிதர் (Accounts Clerk), கணக்குப் பரி சோதகர் (Audit Clerk) ஆகிய வேலைகளுக்குப் பல வெற்றிடங்கள் உள்ளன. எமது பயிற்சியினை மேற் கொள்வதன் மூலம் சிறந்த தொழில் ஒன்றை நீங்கள் பெற்றுக்கொள்ளமுடியும்.

கணக்குப் பதிவியல் துறையில் லண்டன் (London) பட்டம் பெற்றவரும் பதினைந்து வருடகால கணக்கு எழுதும் துறையில் அனுபவம் பெற்றவரின் அனுசரணை யுடனே இப்பாடங்கள் யாவும் தயாரிக்கப்பட்டதாகும். இப்பயிற்சியினைத் திறம்படச் செய்து முடிப்பவர்க்குச் சிறந்த தொழிலினைத் தேடித் தரக்கூடிய சிறந்த நற் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கட்கு முத்திரையொட்டிய தபாலுறை யுடன் சுய விலாசத்தையும் எழுதித் தொடர்புகொள்க.

**புது அறிவொளி** விலை ரூபா 5/-மட்டும்

வெளிவந்து விட்டது எமது கல்வி நிறுவனத்தின் கலை இலக்கிய கல்வி இதழ், பிரபல்ய புத்தகக் கடை களில் கிடைக்கும். நேரடியாகப் பெற விரும்புவோர் ஒரு ரூபா பெறுமதியான ஆறு முத்திரைகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

- யாழ்ப்பாணத்தில் பஸ் நிலையத்துக்கு அருகாமையிலுள்ள சகல கடைகளிலும் புது அறிவொளி இதழ் விற்பனைக்கு உண்டு.

**SPOKEN SINHALA**

**BRIGHT TRAINING CENTRE**

நிறுவனத்தினர் மிக இலகு நடையில் அமைந்த தபால் முறையில் மிகச்சிறந்த பயிற்சி நெறியினை அறிமுகப் படுத்துகிறார்கள்.

உளவியல் அடிப்படையில் மிகமிகப் புதுமையான முறையில்

**'SPOKEN SINHALA'**

பயிற்சி நெறியினை மூன்றே மாதங்களில் கற்றுத்தேறலாம்.

**BUSINESS ENGLISH**

வியாபார ஆங்கிலம் இரண்டு மாத பாடத்திட்டம் இதில் சேருவோர் கடிதம் எழுதும் முறை, வேலைகளுக்கு விணணப்பப்படிவம் எப்படித் தயாரித்தல் என்பனவும் மற்றும் வியாபார உலக அன்றாடப் பாவனை ஆங்கில வாக்கியங்களையும் உள்ளடக்கிய பாடத்திட்டம்.

மேலதிக விபரங்கட்கு முத்திரையொட்டிய தபால் உறையுடன் சுய விலாசத்தையும் எழுதித் தொடர்பு கொள்க.

எமது கல்வி நிறுவனம் அறிமுகப்படுத்தும் மூன்று மாதத்தில் பேச்சு ஆங்கிலம் எனும் பயிற்சியினை இலங் கையில் உள்ள பல பாகத்தினரும் தபால் மூலம் பயின்று பயன் பெற்றுள்ளார்கள். எமது பயிற்சிநெறியானது, மாணவர்களை அறிந்து அவர்களுக்கு இன்று அத்தியா வசியமாகத் தேவைப்படுவது என்ன என்பதை உள வியல் ரீதியில் ஆராய்ந்து அதன்படி தயாரிக்கப்பட் டதே எமது கல்வி நெறியாகும். எனவேதான் மாண வர்கள் எல்லோரும் மற்றைய பயிற்சிகளை விட பிறைட் பயிற்சி நிறுவன "ஆங்கில பேச்சு பயிற்சி" சிறப் பானது எனக் கூறுகிறார்கள்.

முழுக்க முழுக்க மாணவர்களின் நலன் கருதி தயாரிக்கப்பட்டதே எமது பயிற்சியாகும். இது வரை எம்மிடம் பயின்ற மாணவர்கள் தாம் பெற்ற பலாபலனை மற்றையோரும் பெறவேண்டும் எனக் கருதிப் பலர் தங்கள் சிநேகிதர்களையே அறி முகப்படுத்தி உள்ளார்கள். அது மாத்திரமின்றி பலர் தாம் பெற்ற இன்பம் (படிப்பு) அதை எம்முடன் பகிர்ந்தும் உள்ளனர். இத்தோடு வேறு பலர் இப் படிப்பை முடித்துவிட்டு எம்மால் அறிமுகப்படுத்தப் பட்ட வியாபார ஆங்கிலம் எனும் திட்டத்திலும் இணைந்துள்ளனர். மாணவர்கள் மதிப்பே ஒரு கல்வி நிறுவனத்தின் புகழ் என்றால் மிகையாகாது. அதனை மாணவரிடம் பெற்ற ஒரே நிறுவனம் பிறைட் பயிற்சி நிறுவனமேயாகும்.

**எம்மிடம் 90 நாட்களில் ஆங்கிலம் பயின்ற சிலரின் கருத்துக் குவியல்களை பார்ப்போம்**

1: ஆங்கிலப் பாடத்தின் முக்கியத்துவத்தை எமக்கு வெளியிட்டது பிறைட் றெயினிங் சென்ரர். எல்லோரும் "காசைக் கட்டி வீணாக ஏமாறப்போகின் றாய்" என்று கூறினார்கள். தங்கள் பயிற்தி நிலையம் எனது பணத்திற்கு மேலாக ஆங்கில வளத்தை அள்ளித் தந்துள்ளது. 2327

செல்வி கலைவாணி குமாரசாமி
28/3, முரசுமோட்டை, பரந்தன்

2. உங்களுடைய கல்வித்திட்டம் பற்றி என்னுடைய சிபார்சின் பேரில்தான் செல்வி S. ஜெயந்தி என்பவர் உங்களிடம் பயிலுகின்றார். உங்கள் ஒரு மாத பாடத் திலேயே அவரை நான் அறிமுகம் செய்து வைத்தேன். இன்னும் பலரை இக் கல்வித்திட்டத்தில் சேரும்படி கேட்டுக்கொண்டே இருக்கிறேன். 2147 T

செல்வி மேரி யோகராணி
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

15. சர்வதேச மொழிகளில் ஒன்றான ஆங்கிலத்தை எமக்கு விளங்கக்கூடிய வகையில், இலகுவான முறையில் அமைத்துத்தந்த Bright Training Centreன் பணி மேலானது. வேறு ஏதாவது பாடத்திட்டம் அறிமுகப் படித்துவதாயின் எமக்கு அறியத்தரவும்.

செல்வி ரஜனி பொன்னம்பலம்
"ராணி பவனம்",
சேந்தாங்குளம், இளவாலை

16. தங்களது பாடத்திட்டம் எமக்குத் தகுந்த பலன் அளித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தரு கின்றோம். (1957)

S. Bhavani
New Road,
Karainagar.

17. I have fulfilled the conditions. I am very happy now. Because I can read and write English very well now.

Miss T. Chandrka
"Saraswatha Shade",
Goodshed Road,
Kondavil.

19. தங்கள் கல்வி நிலையத்தில் நானும் ஒரு மாண வியாகச் சேர்ந்து படித்ததில் பெருமை அடைகிறேன். உங்களது ஒவ்வொரு பாடத்தொகுதியும் படிக்க மிக வும் இலகுவாகவும். உற்சாகமாகவும் உள்ளது. இப்படி யான ஒரு பாடத்திட்டத்தைத் தயாரித்துத் தந்த உங் களுக்கு எனது பாராட்டும் நன்றியும் உரித்தாகுக.

செல்வி லிங்கேஸ்வரி தட்சணாமூர்த்தி
கலைவாணி வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

# BRIGHT TRAINING CENTRE

**P. O. BOX 162, COLOMBO.**

(ஏ 783)

# இவ்வார பலன்

11- 03 - 1990 முதல் 17- 03 - 1990 வரை

கிரகநிலை: சூரியன் கும்பம், மீனம், சந்திரன், சிங்கம், கன்னி, துலாம், செவ்வாய், மகரம். புதன், கும்பம் மீனம். வியாழன், மிதுனம், வெள்ளி, மகரம், சனி. தனுசு இராகு மகரம் கேது கடகம்.

**மேடம்:** முயற்சிகள் வெற்றி தரும் தொழில்துறையில் முன்னேற்றம் காணப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உறவினர் வருகையும் மங்களகாரியமும் நிகழும் பெரியோர்கள் சந்திப்புண்டு. சிறப்பான வாரம்.

**இடபம்:** வார முற்பகுதியில் அலைச்சலுண்டு. எதிர்பாராத செலவினங்களுண்டு தொழில் பாதிக்கும் மறைமுகமான தொல்லைகள்உண்டு. குடும்பத்தில் அர்த்தமில்லாத சந்தேகங்கள் உருவாகும். இவைவார பிற்பகுதியில் குறையும். மனக்குளப்பம் நிறைந்தவாரம்.

**மிதுனம்:** ஆரோக்கியம் பாதிக்கும். குடும்பத்தில் வெறுப்புமிக்க சம்பவங்கள் நிகழும், தொழிலில் எதிர்பார்த்த லாபம்கிட்டாது. மக்களால் செலவுகளுண்டு பயணங்களால் அலைச்சலுண்டு நன்மையற்ற வாரமாகும்.

**கடகம்:** புத்திரர் வழியில் சந்தோஷமுண்டு. குடும்பத்தில் கலகலப்பு இருக்கும். வெளியுலக தொடர்பு அதிகரிக்கும். தொழில்துறையில் முதலீடு அதிகரிக்கும், அதிர்ஷ்டம் குறைந்த வாரம்.

**சிங்கம்:** நண்பர்கள் நல்ல சந்தர்ப்பத்தில் உதவுவார்கள். பணப்புளக்கம் அதிகமாகும். குடும்பத்தில் நல்ல நிகழ்வுகள் இருக்கும், அரசு வழியில் நல்ல செய்திகள் கிட்டும் மனதுக்கினிய வாரம்.

**கன்னி:** உடல்நிலை பாதிக்கும், புதிய முயற்சிகள் கைகூடாது, பணச்சிக்கல்கள் இருந்துவரும் அரசியல்துறையிலுள்ளோர் பாதிப்படைவர். குடும்பத்தில் மனஅமைதி குன்றும் தீமைகள் குறைந்த வாரம்.

**துலாம்:** தொழில் ரீதியான தடைகளுண்டு. கொடுக்கல் வாங்கல்கள் பகைமையைத்தரும், அரச ஊழியர்கள் பாதிப்படைவர். குடும்பத்தில் விரோதம் காணப்படும். சிறப்பான வாரமல்ல.

**விருச்சிகம்:** நிச்சயமற்ற தன்மை நிலவும். பொருளாதார கஷ்டமுண்டு தொழில் பாதிக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். அன்நியர் ஒருவரால் குடும்பத்தில் சிக்கலுண்டு. தாய்வழிக் கவலையுண்டு சோதனைமிக்க வாரம்.

**தனுசு:** குடும்பத்தில் மங்களகாரியம் நிகழும், தொழில் அதிகலாபம் தரும் புதிய முதலீடுகள் நன்மைதரும், அரசாங்க துறையினருக்கு பதவி மாற்றமுண்டு, நீண்டநாள் பிரச்சனை சுமுகமாக தீரும். நன்மையான வாரம்.

**மகரம்:** தொழில்துறைகளில் மனக்கஷ்டமுண்டு. குடும்பத்தில் இருந்து முரண்பாடு பிரிவைத்தரும், மனைவி வழிகளில் வைத்திய செலவுண்டு. உறவினர் தொல்லை தருவர். அமைதியான வாரம்.

**கும்பம்:** இவ்வாரத்தில் நன்மை தீமை கலந்தே இருக்கும், தொழிலில் பிரசாயத்திற்கேற்ற பலன்கிட்டாது. குடும்பத்தில் சந்தேகம் வலுவடையும், நண்பர்களால் உதவியுண்டு. வெளியூர் பயணங்கள் நன்மைதராது. சராசரியான பலன்தரும் வாரம்.

**மீனம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு. தொழில் துறைகளில் பிரச்னைகளுக்கு முகம்கொடுக்கவேண்டியிருக்கும். பணநிலைமை சாதகமாயிராது பொதுச் சேவைகளில் பாதிப்புண்டு. பாராட்டுக்கள் கிட்டும் நன்மையான வாரம்.

## தபால் பெட்டி சீரமைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நவாலி தேவாலயத்துக்கு முன்பாகவுள்ள தபால் பெட்டி மூன்று வருடங்களாக திருத்தப்படாமல் இருந்துவருகின்றது.

பெரும்பாலான மக்கள் தமது கடிதங்களை யாழ்ப்பாணத்தில் உள்ள தபால் பெட்டியில் போட்டு வருவதால் இதனை உடன் சீர்செய்யுமாறு யாழ் மாவட்ட தபால் அத்தியட்சகரை இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (12)

## விவரணப்படம்

(யாழ்ப்பாணம்)

உலக உணவு ஸ்தாபனம் ''ஆண்களால் ஏற்படுத்தப்பட்ட பஞ்சம்'' என்ற தலைப்பிலான விவரணப்படமொன்றை ஐக்கிய நாடுகள் சிறுவர் நலநிதிய வடபிரதேசகிளைக்கு வழங்கியுள்ளது.

இத்திரைப்படம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பெண்கள் தின விழாவில், திருமதி சர்வமங்களம் கைலாசபதியால் போட்டுக் காண்பிக்கப்பட்டது. (12)

# "சமூகம் பற்றிய ஆய்வுப் பார்வையினை 'நம்பிக்கை' நாவல் உணர்த்துகிறது"

## - திருமதி சித்திரலேகா மௌனகுரு

(யாழ்ப்பாணம்)

''நந்தி பன்முக ஆளுமை வாய்ந்த ஒருவர் சிறுகதை, நாடகம், நாவல், நாடக சினிமா, நடிப்பு ஆகியவற்றில் தமது ஆக்கத் திறமையினை வெளிக்காட்டியவர். சமூக மருத்துவவியல் பேராசிரியராகத் தொழில் புரியும் 'நந்தி' யுடைய மூன்றாவது நாவலாகிய 'நம்பிக்கைகள்' சமூகம் பற்றிய அவரது ஆய்வுப் பார்வையினை எமக்கு உணர்த்துகிறது.''

இவ்வாறு எழுத்தாளர் 'நந்தி'யின் 'நம்பிக்கைகள்' நாவல் வெளியீட்டின்போது, ஆய்வுரை நிகழ்த்திய பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி சித்ரலேகா மௌனகுரு தெரிவித்தார்.

திரு. லோறன்ஸ் தலைமையில் நடந்த வெளியிட்டு விழாவில் அவர் மேலும் பேசுகையில் ''எம் மத்தியில் தோன்றுகின்ற இலக்கியங்களை மதிப்பிடும்போது, அவற்றைத் தனியே ஈழத்து இலக்கியப் பின்னணியில் நோக்கவேண்டும். இன்றைய கால கட்டத்தில் ஏற்பட்ட சகல வளர்ச்சிகளுக்கும் வாரிசாக நம்மைக் கருத வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு அகன்ற பின்னணியில் எமது இலக்கியங்களை நோக்கி மதிப்பிடும்போது தான் எமது இலக்கியங்களில் குறை நிறைகளையும் மேலும் அடைய வேண்டிய வளர்ச்சியையும் நாம் எய்த முடியும்'' என்றார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி வெளியீட்டுரை நிகழ்த்தினார். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணிய ஐயர், சொக்கன் ஆகியோர் நூல் பற்றி ஆய்வு செய்தார்கள். (ம)

# ஹமீத் - லிபரல் கட்சி தூதுக்குழு சந்திப்பு

(கொழும்பு)

உயர்கல்வி, விஞ்ஞான அமைச்சரும், வடக்கு-கிழக்கு மாகாண சமாதானக் குழுவின் தலைவருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத், அண்மையில் லிபரல் கட்சித் தூதுக்குழுவைச் சந்தித்து, வடக்கு-கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரச்சனைகள் குறித்து கலந்துரையாடினர்

கலாநிதி சானக்க அமரதுங்க தலைமையிலான இத் தூதுக்குழுவில் கே. அசத்து பெரேரா, ஜெகான் எதிரிசிங்கா கா. பீரிஸ், எஸ்.இராஜசுந்தரம் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இச்சந்திப்பின்போது மாகாண சபைகளுக்கு அதிகார பகிர்வு, தேசிய மொழிக் கொள்கை, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தேர்தல்நடாத்தல், தோட்டப்பகுதி மக்களின் எதிர்காலம் ஆகியன குறித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். (அ)

# சுப்பிரமணியம் நினைவஞ்சலிக் கூட்டம்

(கொழும்பு)

மறைந்த கே. ஏ. சுப்பிரமணியத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று ஞாயிறு மாலை 4 00 மணிக்கு திரு. கே. நடனசபாபதி தலைமையில் விஜேராம மாவத்தை கொழும்பில் உள்ள இலங்கை விஞ்ஞான முற்னேற்றச்சங்க கேட்போர் கூடத்தில்நடைபெறும்.

ஜனாப் ஹலீம் இசாக், திரு. எஸ். டி. பண்டாரநாயக்க, திரு டபிள்யூ. ஏ. தர்மதாஸ, கலாநிதி கே. எல். வி. அழகியவண்ண, திரு நிகால் டயஸ். திரு. எஸ். கே. செந்தில்வேல் ஆகியோர் பேச்சாளர்களாகக் கலந்து கொள்ளும் இக்கூட்டத்தை கே. ஏ. சுப்பிரமணியம் ஞாபகார்த்தக்குழு ஏற்பாடு செய்துள்ளது. (பூ)

# அரிசிவிலை வீழ்ச்சி!

(கொக்குவில்)

அரிசி விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது நல்லூர் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் ஒரு கிலோ அரிசிக்கு 2 ரூபா 50 சதம் குறைத்து விற்பனை செய்யும்படி தமது கிளைகளுக்கு அறிவித்துள்ளது. இதையிட்டு தனியார் விற்பனை நிலயங்களிலும் விலைகுறைத்து விற்பனை செய்யப்படுகின்றது.

## தோழர் மணியம் நினைவு மலர்

மறைந்த தோழர் கே ஏ. சுப்பிரமணியத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று கொழும்பில் நடக்கின்றது.

மறைந்த தோழர் தம் இளமைக்காலம் முதல் பொதுவுடமைக்கொள்கையை வரித்துக்கொண்டவர். மார்க்சிய — லெனினிச தத்துவத்திற்கு விசுவாசமாக ஒழுகியவர் அக்கொள்கைக்காக அல்லும் பகலும் சோராது உழைத்தவர். பல போராட்டங்களை நடாத்திய சாதனையாளர்.

கம்யூனிஸ்ட் கட்சி (இடது) பொதுச்செயலாளராகக் கடமையாற்றிய அன்னாரின் நினைவு மலர் வெளிவந்துள்ளது. அவரின் ஞாபகார்த்தக் குழு இதனைத் தொகுத்து வெளியிட்டுள்ளது.

இலங்கையின பல அரசியற் கட்சிகளின் தலைவர்களும், இலக்கிய நண்பர்களும், பத்திரிகையாளர்களும் அன்னாரது அரசியல் நடவடிக்கைகள், குணநலப் பண்புகள் ஆகியவற்றைப் பாராட்டிப் பல கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதியுள்ளனர்.

அவரது அரசியலை விளக்கியிருக்கிறார்கள் சிலர்; அவரது போராட்டத் தலைமைப் பண்புகளையும் விமர்ச்சித்திருக்கிறார்கள் சிலர்; அவரின் மனித நேயத்தைத் தொட்டிக் காட்டிருக்கிறார்கள் சிலர்.

இவர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள் பல மலரை அலங்கரிக்கின்றன. ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடிய ஒரு வாழ்க்கை நிகழ்ச்சிகள் அரசியல் வரலாற்றில் இடம்பெற வேண்டியன. அந்த வகையில் இந்த மலர் பலருக்குஉதவக்கூடியது.

— சிவா

# வடமராட்சி மாணவிக்கு வலதுபுறத்தில் இருதயம்!

(வடமராட்சி)

வடமராடசியில் 15 வயது மாணவி ஒருவருக்கு இருதயம் வலது புறமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியைப் பிறப்பிடமாகப் கொண்ட இம் மாணவி அண்மையில் நடைபெறவுள்ள க. பொ. த (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்.

சிறுவயது முதல் திடீர் திடீரென நோய் வாய்ப்பட்டுவரும் இவர் கடந்த ஜனவரி மாதம் சிகிச்சையொன்றிற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதே இந்த இருதயமாற்றம் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த இருதய மாற்றதிற்கான சத்திரசிகிச்சை இலங்கையில் இதுவரை செய்யப்படவில்லை என்றும் வெளிநாடு சென்று தான் இதனைச் செய்யவேண்டும். என்றும் மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

**Vacancy in BAHRAIN**

(I) Diesel, Petrol Mechanic & Auto Electrician.
(II) Salesmen for a leading Motor Spare Parts Shop with English knowledge & qualfied in Motor Mechanism.

(Very Attractive Salary, with Food & Accomadation Free)
Very Urgent Contact within 3 Days.

A. K. SIVAGNANAM
171/A, Brown Road,
JAFFNA.

NEEMS AGENCIES
32 A, Horton Place,
COLOMBO-7.

(C3587)

# தவக்கால நற்சிந்தனை

## ஞானம்

''இன்று நான் ஒரு பக்கத்திலே வாழ்வையும் நன்மையையும், மற்றொரு பக்கத்திலே சாவையும் தீமையையும் வைத்து உனக்குக் காண்பித்தேன் என்பதைச் சிந்தித்துப் பார்'' என்று இறைவன் கூறுகின்றார். ஆதி பெற்றோர், நன்மை எது, தீமை எது என்று அறிந்திருந்தும்கூட அவர்கள் தமது அகங்காரத்தினால் இறைவனை விட்டுப் பிரிந்தார்கள். எனவே உலகில் பிறந்த பாவம் நன்மை எது தீமை எது என்று பிரித்தறியும் வல்லமையை மனிதனிடமிருந்து எடுத்துவிட்டது ஞானம் இறைவனின் கொடை. இறைவன் அந்தக் கொடையை மனித உள்ளத்தில் விதைக்கவே விரும்புகிறார். ஏனெனில் பாவத்தினால் மங்கி மறைந்துவிட்ட தூய ஆவியின் நன்மை தீமையைப் பிரித்தறியும் ஞானமாகிய வரத்தினை நாம் மீளப்பெற்றுக்கொள்ளும்வரை உலகின் தீய சக்தியுடன் போராட வேண்டியுள்ளது. இறைவன் எமக்குத் தருகின்ற ஆற்றல்கள் தீமைகளிலே நாம் திறமை பாராட்டாமல் அவற்றைக் கொடுத்த இறைவனிலேயே பெருமை பாராட்டி அவரின் மகிமைக்காகவே உழைக்கவேண்டும். ஞானத்தைப் பெற்ற சாலமோன் அரசன் தற்பெருமை கொண்டதனால் பாவத்திலே வீழ்ந்தான். எனவே நாம் இறைவன் தந்த கொடைகளை அவரின் புகழ்ச்சிக்காக நன்மை தீமையை அறிந்து வாழும் வரமாகிய ஞானத்தை இறைவனிடம் பெற்று வாழுவோம்.

அருட் திரு:
அன்ரனி பாலா

எமது நாளைய புதிய வெளியீடு

தியாகராஜன் ★ ரூபினி ★ V. K. ராமசாமி
வழங்கும்
"சேலம் விஷ்ணு"

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ-600)

# வரதர் இந்தியா பயணம் கொழும்பில் வதந்தி

(கொழும்பு)

திரு. வரதராஜப் பெருமாளும் அவரது மனைவியும் ஈ. பி. ஆர். எல் எவ் செயலாளர் நாயகம் திரு கே. பத்மநாபாவும் இந்தியா சென்றுவிட்டதாக நேற்று கொழும்பில் வதந்திகள் அடிபட்டன. எனினும் இதுவரை இச்செய்தி ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

இந்தியா திரும்பிய அமைதிப் படையினருடனேயே திரு. வரதராஜப்பெருமாளும் திரு. பத்மநாபாவும் சென்றுள்ளதாகவும் கொழும்பில் பரவலாக பேசப்பட்டது.

முன்னாள் முதல்வருக்கான தொலைத் தொடர்புகள் கடந்த இரு தினங்களாக இயங்காது போனதாலும் இச்செய்தி நம்பகமாயிருக்கலாமெனவும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது இதே வேளை திரு. பெருமாளின் மனைவி கடந்த வியாழக்கிழமை திருமலையில் விமான நிலையமொன்றிலிருந்து இந்தியா சென்றதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது. (சி)

# அக்கரையிலிருந்து போராடுவோம் - வரதர்

(திருகோணமலை)

"அக்கரையில் இருந்துகொண்டு மீண்டும் ஈழத் தமிழர்களுக்கான போராட்டத்தை நடத்துவோம்" என்று திரு. வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

திருமலையில் பத்திரிகையாளருக்கு அளித்த இப்பேட்டியில் அவர் மேலும் கூறுகையில்; நான் நாட்டை விட்டு குறுகிய காலத்துக்கு வெளியேறினாலும், தனிஈழத்துக்கான போராட்டம் தொடரும். எமது இப்போராட்டதுக்கான திட்டம் இரகசியமானது."

இந்திய அமைதிப்படை முற்றாக வெளியேறிய பின்னரும், ஏனைய தமிழ் போராளிக் குழுக்களுடன் இணைந்து தனிஈழத்துக்கான போராட்டத்தை தொடரவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளையில் இந்திய அமைதிப்படை வெளியேறிவிட்டாலும், திரு. வரதராஜப் பெருமாள் வடக்கு கிழக்குமாகாண அரசியல் அரங்கிலிருந்து வெளியேறிவிடுவார் என்று கூறமுடியாது என இந்திய "ரேூ" கருத்து வெளியிட்டுள்ளது.

திரு. வரதராஜப் பெருமாள் இந்திய அமைதிப்படை இலங்கையில் ஆற்றிய சேவைகளுக்கு நன்றி தெரிவித்து, எழுதிய கடிதம் கடந்தவெள்ளியன்று, அமைதிப்படை மேஜர் ஜெனரல் திரு. கல்கத்துக்கு அனுப்பப்பட்டதாகவும், அறியப்படுகிறது.

## கொ[illegible] தின[illegible]

(கிளிநொச்சி)

கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள குருகுலம் ஆண்டு விழாவும், கொடிதினமும் கிளிநொச்சியல் உள்ள குருகுலத்தில் இன்று ஞாயிறு நடைபெறும். (பூ)

## தொண்டர்படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை சுமார் 600 பொலிஸார் இப்பகுதிகளிற்கு அனுப்பப்படுவதற்காக பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)


# மரண அறிவித்தல்

## திருமதி கௌரியம்பாள் இராஜகுலசேகரம்

நவாலி வடக்கைச் சேர்ந்த திருமதி கௌரியம்பாள் இராஜகுலசேகரம் அவர்கள் 09-03-1990 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்ற உயர்திரு. இராஜகுலசேகரம் (முன்னாள் V C. Chairman), மானிப்பாய் அவர்களின் அன்பு மனைவியும், பரராஜசிங்கம் (இளைப்பாறிய Grindlays Bank முகாமையாளர்), இராஜகுலசூரியர் (ஆ..ரியர், மெமோரியல் ஆங்கில பாடசாலை, மானிப்பாய்), காலம் சென்ற விஜயகுலசிங்கம், கௌரிமனோகரி, அமரகுலசிங்கம், குமாரலகுலசிங்கம், (Northern Industries PvtLtd), ஜெயகுலசிங்கம் (Canada), தேவிமனோகரி ஆகியோரின் அருமைத் தாயாரும், இராஜேஸ்வரி, கமலாவதி, யோகாம்பிகை, (ஆசிரியை யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை), மகாதேவன் (Lanka Cement Ltd. K. K. S.), விமலா தேவி, பவானி (இந்தியா), நாகேஸ்வரன் (உரிமையாளர், தம்பிப்பிள்ளை ஸ்ரோர்ஸ். வவுனியா)ஆகியோரின் அன்பு மாமியாரும், P இராஜகுலசேகரம், கௌரீஸ்வரி, இராஜலஷ்மி, கஜரூபன், சிவபாலன், அருள்தேவன், லலிதாம்பிகை, ஞானம்பிகை, J. இராஜகுலசேகரம், அனுஷியா, பிரியதர்ஷினி, யதீஸ்வரன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கணபதிப்பிள்ளை, சண்முகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 11-03-1990 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

மடத்தடி ஒழுங்கை,
மானிப்பாய் தெற்கு, மானிப்பாய். (சி-3589)



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.


## யாழ். நகரை புனரமைக்க 3 வருடத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையினர் வன்செயலின்போது உடைந்த கட்டடங்கள் திருத்துவதற்கு மூன்று வருடத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

வாடிவீடு.ஸ்ரேடியம் திறந்த வெளி அரங்கு ஆகியன இத்திட்டத்திலடங்கும்.

அத்தோடு சட்டவிரோதமாக கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களை அகற்றுவதற்கும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. (152)

## வெலிஓயா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு போன்ற பகுதிகளில் குடியமர்த்தப்படுவர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் கடந்த நான்கு ஐந்து வருடங்களின் பின் சுமார் நூறு தமிழ்க் குடும்பங்கள் அங்கு மீண்டும் குடியமர்த்தப்பட்டுள்ளன. (சி)

## வல்வையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனர். இதனை அகற்றக்கோரி அன்று முதல் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தது. எனினும் நேற்று முன்தினமே இவர்கள் இங்கிருந்து வெளியேறினர்.

அண்மையில் விடுதலைப் புலிகளிற்கும் இலங்கை அரசுக்கு இடையில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக உடன்பாடொன்று எட்டப்பட்டதே இதற்கு காரணமாயிருக்கலாமென்றும் நம்பப்படுகிறது. (51-ச)

## புதிய தேர்தல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வர் திரு. கருணாநிதி மேற்கொண்டுள்ள பேச்சுக்கள் இன்னமும் முடிவடையவில்லை. தொடர்ந்தும் அவர் வடக்கு-கிழக்கில் தமிழ் குழுக்களிடையே சமாதானம் ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவார்.

வடக்கு - கிழக்கில் யுத்த நிறுத்தத்தையும் மாகாண சபை கலைக்கப்பட்டு புதிய தேர்தல்கள் நடாத்தவுமே இந்தியா விரும்புகிறது.

வடக்கு-கிழக்கு மாகாண சபையை கலைக்குமாறு இந்தியாவின் சார்பில் நானும் தமிழக முதல்வரும், முதலமைச்சர் என்ற முறையில் திரு. வரதராஜப் பெருமாளை கேட்டிருந்தோம் என்றும் அவர் கூறினார். [சி]

## தமிழ்நாட்டில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களை தொடர்ந்து அவர்களுடன் மோதுவதற்கு வேறோர் குழு இங்கு வரும் சந்தர்ப்பம் ஏற்படும் இதனால் இங்கு சட்டம், ஒழுங்குப் பிரச்சனை ஏற்படும்.

இலங்கையிலிருந்து வரும் உண்மையான தமிழ் அகதிகளிற்கு தமிழகத்தில் புகலிடம் வழங்கப்படும் ஆனால் கடந்த சில தினங்களாக இங்கு வரும் பெருந்தொகையினர் அகதிகள் இல்லை. தமிழ் அகதிகளுக்கென அரசு சகல உதவிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தமிழகம் வந்த தமிழ்க்குழுக்கள் அகதிகள் அல்ல என்பது எனக்கு தெரிவிக்கப்பட்ட பின்பு நான் மத்திய அரசுடனும் பிரதமர் திரு. வி. பி. சிங்குடனும் தொடர்பு கொண்ட பிறகே அவர்களை திருப்பி அனுப்பினேன் என்றார்.

இதேவேளை இவர்களை ஏற்றிச் சென்ற இந்திய கப்பல்கள் நேற்று காலை ஒரிஸா சென்றடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## தமிழகத்தில் ரயில் மறிப்பு போராட்டம் தலைவர்கள் பலர் கைது!

(சென்னை

தமிழகத்தில் ரயில் மறிப்பு போராட்டத்தில் ஈடுபட்ட காங்கிரஸ் தலைவர்கள் பலர் கைதுசெய்யப்பட்டனர். எனினும் இப்போராட்டத்தால் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் அரசு தெரிவித்துள்ளது.

இப்போராட்டத்தில் ஈடுபட்ட தமிழக முன்னாள் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. கே. மூப்பனார், முன்னாள் அமைச்சர்கள் திரு, ப. சிதம்பரம், திரு. அருணசலம், திருமதி மரகதம் சந்திரசேகர் உட்பட 3000ற்கும் மேற்பட்ட காங்கிரஸ் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

மறைமலைநகர் ரயில் நிலையத்தை 'காமராஜர் நகர்' ரயில் நிலையம் என பெயர் மாற்றம் செய்யக் கோரியே இப்போராட்டம் தடைபெற்றது. (சி)

## யாழ். - கொழும்பு இரவு ரயில் தபால் சேவை தாமதம்

[யாழ்ப்பாணம்]

இரவு தபால் சேவை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டபோதும் தபால்கள் இரவு தபால் ரயிலில் அனுப்பப்படுவது ஒருசில தினங்கள் தாமதப்படுமென யாழ்ப்பாண பிரதம தபால் அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரதம தபால் அத்தியட்சகர் தபால்களை ஏற்றுக்கொள்வதற்கும் ரயிலில் நடமாடும் தபாலகத்தை ஆரம்பிப்பதற்கும் உடனடியாக சில ஒழுங்குகளைச் செய்வதற்கு தாமதம் இருந்து வருவதால் சில தினங்களுக்கு வழமைபோல் தபால்கள் காலை ரயிலில் தான் அனுப்பிவைக்கப்படும். சகல தபால் நிலையங்களுக்கும் தபால்களை இரவு தபால் நிலையத்தில் பெற்றுக்கொள்வதற்கும் தபால்களை ரயிலில் அனுப்பிவைப்பதற்குமான உத்தரவுகளை செவ்வாய்க்கிழமையே அனுப்பிவைப்பார்.

தபால் ரயிலில் கடமையாற்றும் அதிகாரிகள், ஊழியர்களை திணைக்களம் ஏற்பாடு செய்யவேண்டும். இவ்ஒழுங்குகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் இரவு தபால் ரயிலில் தபால்கள் தினமும் அனுப்பி வைக்கப்படும். (12)

## இராணுவப் பயிற்சிக்கு லெபனான் செல்ல வரதர் விருப்பம்

(திருமலை)

வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாளும் அவரது குழுவினரும், இராணுவப் பயிற்சி பெற லெபனான் செல்லவிருப்பதாக ஈ. பி. ஆர். எல். எவ் தகவல் தெரிவித்திருப்பதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறுகின்றன.

இதுவரையில் தான் ராணுவ பயிற்சி பெறவில்லை என்றும், தகுந்த இராணுவப் பயிற்சி பெற்று ஈழப்போராட்டத்தை தொடரவிருப்பதாகவும் திரு. வரதராஜப் பெருமாள் பத்திரிகையாளர்களுக்கு தகவல் தெரிவித்தாகவும் அறியப்படுகிறது.

தமது இயக்கத்தின் நோக்கங்களை நிறைவேற்ற வெளிநாடுகளின் உதவியை பெறவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளாராம்.

## அந்நியப்படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு. சந்திரன், கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் திரு. கோபி ஆகியோருக்கும் கிளிநொச்சி நகரில் குதூகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

திரு. வீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. மாத்தயா மேலும் பேசுகையில்:

தமிழினம் சுதந்திரத்திற்காக போராடும் தேசிய இனமாகும். எம் இனத்திற்கென தனியான கலை, கலாசாரம் உண்டு. எமது பாரம் பரியங்களை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும் புதிய கலைவடிவங்களை உருவாக்கி கலைத்துறையில் மறுமலர்ச்சி காணவேண்டும் என்றார்.

செயலதிபர் திரு. யோகி பேசுகையில்; நாம் ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுக்கள் நடத்தி இராஜதந்திர நடவடிக்கை மூலம் அமைதிப்படையை வெளியேற்றியுள்ளோம். நாம் ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்தாலும் தேர்தலுக்காக வாழ்ந்து, வாழ்கிற கட்சியல்ல எமது இலட்சியம் எம் இன விடிவே. கவிஞர் காசி ஆனந்தன், கவிஞர் புதுவை இரத்தினதுரை, திருவாளர்கள் சந்திரன், கோபி ஆகியோரும் உரையாற்றினார்கள். (83)

## திருமலையில் ஏற்படும் மாற்றம்

(திருமலை)

வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் அவரது சகாக்களும், திருமலையைவிட்டு வெளியேற் விருப்பதற்கான செய்திகள் அடிபடத் தொடங்கியதை அடுத்து திருமலைப் பகுதிகளில், ஏதோ ஒருவித மாற்றத்துக்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன.

வடக்கு கிழக்கு மாகாண சபையில் பணியாற்றி வந்த உயர் அதிகாரிகளினது நடமாட்டம் குறைந்து காணப் படுகிறது.

## திருமலையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சீனன்குடாவில் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான கட்டடத்திலும் 'பெர்மா காம்ப்' பகுதியிலும் இதுவரை காலமும் இந்தியப் படையினர் நிலைகொண்டிருந்தனர்.

கடந்த 5ம் திகதி இங்கிருந்து இந்தியப் படையினர் முற்றாக வெளியேறியுள்ளனர்.

தற்போது இப்பகுதியில் திடீரென இலங்கை கடற்படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.